

கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# பகவத் தரிசனம்





ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை   ஆகஸ்ட் 2011   ₹ 15/-






தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# பகவத் தரிசனம்

மலர் 1, இதழ் 1


ஆகஸ்ட் 2011



3 கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டல்

—ஸ்ரீல பிரபுபாதர்

இதயத்தைத் தூய்மை செய்வதற்கான சிறந்த வழி



7 துவாரகை

—பக்தி விகாஸ ஸ்வாமி

இந்நகரத்தின் உண்மையான செல்வச் செழிப்புகளை இன்று நம்மால் காண முடியாவிட்டாலும், இங்குள்ள மக்களின் புனிதத் தன்மையால் நாம் கவரப்படுவது உறுதி.

யார் முழுமுதற் கடவுள்? 16

—ஜெய கோபிநாத தாஸ்


கடவுள் இருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொள்வோருக்கு மத்தியிலும், யார் கடவுள்? என்ற கேள்விக்கான விடை பெரும்பாலும் இல்லை.



தலை வணங்குதல் 18

—ஸ்ரீல பிரபுபாதர்

ஸ்ரீல பிரபுபாதருடன் சியாட்டலில் நடைபெற்ற ஓர் உரையாடல்



தீவிரவாதச் செயல்கள் 20

—பக்தி விகாஸ ஸ்வாமி

ஓர் ஆன்மீகப் பார்வை





பகவத் கீதை உண்மையுருவில் 25

—ஸ்ரீ கிரிதாரி தாஸ்

எட்டாம் அத்தியாயத்தின் ஒரு கண்ணோட்டம்

12 கிருஷ்ணர்...

13 கடவுளைத் தேடிய ஐரோப்பிய மனிதன்

23 ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம்

29 ஸ்ரீமத் பாகவதம்

## பகவத் தரிசனம்

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *பகவத் தரிசனம்.*

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ் (C.செந்தில் குமார்)

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, ஆனந்த், இராம கிங்கர தாஸ், கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், சுகோபி தேவி தாஸி, மதுமதி பிரியா தேவி தாஸி, ராஜ சேகர், ஜெய கிருஷ்ண தாஸ்

**பதிப்பாசிரியர்:** யுதிஷ்டிர தாஸ் (உஜ்வல் ஜாஜோ)

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அட்டைப்பட வடிவமைப்பு:** ஸ்ரீ கேசவ தாஸ்

**அலுவலக உதவி:** சாது சைதன்ய தாஸ்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**பதிப்பகத்தார் அலுவலகம்:** பேக் டு காட்ஹெட், 33, ஜானகி குடிர், ஜுஹு சர்ச் எதிரில், ஜுஹு, மும்பை - 400049.

**சந்தா அலுவலகம்:** இஸ்கான், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net, tamilbtg@gmail.com

**அச்சிட்டோர்:** சாரதி பிரிண்டர்ஸ், 6/63, LIG, தொண்டைமான் தெரு, NH-1, மறைமலைநகர், தமிழ்நாடு - 603209.



**பதிப்புரிமை** © 2011, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே. (பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் அறங்காவலர்: ஜெயாத்வைத ஸ்வாமி)



பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை


# ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி



பிரம்மாவின் பகல் நேரத்தில், வைவஸ்வத மன்வந்தரத்தின் 28ஆவது யுக சுழற்சியில் வரும் துவாபர யுகத்தின் இறுதியில் மட்டுமே கிருஷ்ணர் தோன்றுகிறார் என்றபோதிலும், அவரது அவதாரத்தை அடுத்துவரும் கலி யுகத்தில் அவர் தோன்றிய திருநாளை கொண்டாடும் வாய்ப்பு நம் அனைவருக்கும் கிடைத்துள்ளது. நிலவானது ரோகிணி நட்சத்திரத்தில் இருந்தபோது அஷ்டமி திதியின் நள்ளிரவில் கிருஷ்ணர் தோன்றியதாக பாகவதத்தில் விளக்கப்பட்டுள்ளது. இருப்பினும், மகிழ்ச்சியினால் நிலவானது முழுமையாகத் தோன்றியது. அதுபோல, வசந்த காலத்தைச் சேர்ந்த பூக்களும் மலரத் தொடங்கின. கம்சனால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வேத உச்சாடனங்கள் மீண்டும் திடீரென்று தொடங்கின. அவர் தேவகியின் கருவிலிருந்து வெளிவந்தபோது, தேவர்கள் பிரார்த்தனைகளைச் செலுத்தினர். அவரது பிறப்பு கம்சனால் மறைக்கப்பட்டிருந்தது, இருப்பினும் அவர் இவ்வாறாக மதிக்கப்பட்டார். தற்போதைய சூழ்நிலையில் அவரது பிறப்பினை மறைத்துவைப்பதற்கு எந்தவொரு அவசியமும் இல்லை. நாம் அவரது அவதாரத் திருநாளை புகழ்ச்சிகள், பாடல்கள், ஆடல்கள், நாடகங்கள், அபிஷேகம், நைவேத்யம் என சகல வசதிகளுடன் வெளிப்படையாகக் கொண்டாடலாம். பகவானுக்குரிய எல்லா குணங்களும் கிருஷ்ணரில் பூரணமாக வெளிப்படுவதாக பாகவதம் கருதுவதால், அத்தகு வழிபாடு பொருத்தமானதாகும். கிருஷ்ணரின் வசீகரமான குணங்களின் காரணத்தினால், பகவானின் எல்லா ரூபங்களிலும் அவரே அதிகமாகப் புகழத்தக்கவர். கிருஷ்ண கீர்த்தனத்திற்கு எல்லையே இருக்கக் கூடாது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் ஆன்மீகப் பாதையின் வளர்ச்சிக்கு உதவி செய்து கொள்ளுங்கள்.

—தவத்திரு பானு ஸ்வாமி, ஜிபிசி, தமிழ்நாடு

### இப்பத்திரிகையின் குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை—ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

## கேள்விகளும் கருத்துகளும்

**பகவத் தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

# கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டல்

## இதயத்தைத் தூய்மை செய்வதற்கான சிறந்த வழி

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய, தர்மம் என்னும் புத்தகத்தின் பன்னிரண்டாம் அத்தியாயம்**

ஷ்ருண்வதாம் ஸ்வ-கதா: க்ருஷ்ண:
புண்ய-ஷ்ரவண-கீர்தன:
ஹ்ருத்யந்த: ஸ்தோ ஹ்யபத்ராணி
விதுனோதி ஸுஹ்ருத் ஸதாம்

"அனைவரின் இதயத்திலும் பரமாத்மாவாக இருப்பவரும், உண்மையான பக்தர்களுக்கு அனுக்ரஹம் செய்பவருமான முழுமுதற் கடவுள் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்திகளை முறையாகக் கேட்பதும் பாடுவதும் புண்ணியம் தரக்கூடியதாகும். அச்செய்திகளைக் கேட்பதில் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டுள்ள பக்தனின் இதயத்திலிருந்து, ஜட இன்பங்களுக்கான ஆசைகளை அவரே அகற்றிவிடுகிறார். (ஸ்ரீமத் பாகவதம் 1.2.17)



பரம புருஷ பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் செய்திகளுக்கும் அவருக்கும் எந்த வேறுபாடும் இல்லை. எனவே, குற்றங்கள் ஏதுமின்றி, பகவானைப் பற்றிக் கேட்கும்போதும் அவரது புகழைப் பாடும்போதும், அந்த தெய்வீக ஓசையின் வடிவில் பகவான் கிருஷ்ணர் அங்கு எழுந்தருளியுள்ளார் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். அத்தகு தெய்வீக ஓசை பகவானுக்கு இணையான சக்தியைக் கொண்டதாகும். ஸ்ரீ சைதன்ய மஹாபிரபு தன்னுடைய சிக்ஷாஷ்டகத்தில், பகவானின் எல்லா சக்திகளும் அவரது திருநாமத்தில் உள்ளன என்றும், அச்சக்திகளை அவர் தன்னுடைய எண்ணற்ற திருநாமங்களில் உள்ளடக்கியுள்ளார் என்றும் தெளிவாகக் கூறுகிறார். திருநாமத்தை உச்சரிப்பதற்கு கால நியமங்கள் ஏதுமில்லை, தமது வசதிக்கேற்ற காலத்தில் யார் வேண்டுமானாலும் கவனத்துடனும் மரியாதையுடனும் திருநாமத்தை உச்சரிக்கலாம். நம்மீது மிகவும் கருணை கொண்டுள்ள இறைவன், தெய்வீக ஓசையின் வடிவில் தனிப்பட்ட முறையில் நம்முன் தோன்றுகிறார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இறைவனின் திருநாமங்களையும் செயல்களையும் கேட்பதிலும் புகழ்வதிலும் நாம் ருசியற்றவர்களாக உள்ளோம். புனிதமான ஓசையைக் கேட்பதற்கும் பாடுவதற்குமான ருசியை வளர்ப்பது பற்றி நாம் ஏற்கனவே விவாதித்துள்ளோம். இறைவனின் தூய பக்தருக்குத் தொண்டு செய்வதால் அந்த ருசியைப் பெறலாம்.

பகவான் தமது பக்தர்களிடம் பரஸ்பரமான அன்பைப் பரிமாறிக் கொள்கிறார். தனது தெய்வீகத் தொண்டில் நுழைவதற்கான அனுமதியைப் பெறுவதில் ஒரு பக்தன் முற்றிலும் தீவிரமாக இருப்பதையும் தன்னைப் பற்றிக் கேட்பதில் ஆர்வம் காட்டுவதையும், பகவான் காணும்போது, அந்த பக்தர் எளிதில் தம்மிடம் திரும்பி வருவதற்கு உதவும் வகையில், அவரே அந்த பக்தரின் இதயத்தில் இருந்து செயல்படுகின்றார். பகவானுடைய இராஜ்ஜியத்திற்குச் செல்வதில் நமக்கிருக்கும் ஆர்வத்தைக் காட்டிலும், நம்மை மீண்டும் அழைத்துக் கொள்வதில் அவர் அதிக ஆர்வத்துடன் உள்ளார். நம்மில் பெரும்பாலான மக்களிடம் முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கான ஆசைகூட இல்லை. மிகவும் சொற்பமானவர்களே

முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்ல விரும்புகின்றனர். ஆனால் இறைவனிடம் திரும்பிச் செல்ல ஆசைப்படும் அனைவருக்கும் ஸ்ரீ கிருஷ்ணர் எல்லா விதங்களிலும் உதவி புரிகின்றார்.

எல்லா பாவங்களிலிலிருந்தும் முற்றிலும் விடுபட்டாலொழிய பகவானின் இராஜ்ஜியத்திற்குள் எவராலும் நுழைய முடியாது. பௌதிக பாவங்களெல்லாம், இந்த ஜட இயற்கையை அடக்கியாள வேண்டும் என்ற நம்முடைய ஆசை களின் பலன்களேயாகும். இத்தகைய ஆசைகளிலிருந்து விடுபடுவது மிகவும் கடினமானதாகும். முழுமுதற் கடவுளிடம் திரும்பிச் செல்வதற்கான பாதையில் முன்னேற்றம் காணும் பக்தர்களுக்கு மங்கையரும் செல்வமும் மிகப்பெரிய தடங்கல்களாகும். பக்திப் பாதையிலிருந்த பல்வேறு முன்னோடி பக்தர்களும் இத்தகைய கவர்ச்சிகளுக்கு அடிமையாகி, முக்திப் பாதையிலிருந்து பின்வாங்கியுள்ளனர். ஆனால் ஒருவன் பகவானால் உதவி செய்யப்படும்போது, அவரின் கருணையால் மொத்த வழிமுறையும் மிகவும் சுலபமானதாகின்றது.

மங்கையர் மற்றும் செல்வத்தின் தொடர்பினால் அமைதியை இழப்பதில் ஆச்சரியமில்லை; ஏனெனில், ஒவ்வோர் உயிர்வாழியும் கற்பனைக்கெட்டாத பன்னெடுங் காலத்திற்கு முன்பிலிருந்தே இவற்றுடன் சகவாசம் கொண்டிருக் கின்றான்; மேலும், இயற்கைக்கு எதிரான இந்நிலையிலிருந்து விடுபடு வதற்கு கால அவகாசம் பிடிக்கிறது. ஆனால் ஒருவர் பகவானின் பெருமைகளைக் கேட்பதில் ஈடுபட்டால், படிப்படியாக அவர் தன்னுடைய உண்மை நிலையை உணர்ந்து கொள்வார். பகவானின் கருணையால், அத்தகைய பக்தர், குழப்பங்களிலிருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்குத் தேவையான சக்தியைப் பெறுவதுடன், குழப்பத்திற்கான எல்லா காரணங்களும் அவருடைய மனதிலிருந்து படிப்படியாக அகற்றப்படுகின்றன.

கிருஷ்ணர் புரிந்த பலவிதமான லீலைகள், மஹாபாரதம், ஸ்ரீமத் பாகவதம் போன்ற வேத இலக்கியங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளதால், அவரது பெருமைகளைக் கேட்டல் என்பது மிகவும் எளிதானதாகும். ஸ்ரீமத் பாகவதம் கிருஷ்ண லீலைகளின் வர்ணனைகளால் நிரம்பியுள்ளது; இவை கேட்பவரைத் தூய்மைப்படுத்தி, மிகுந்த ஆனந்தத்தையும் அளிக்கக் கூடியவை. மக்கள் பெரும்பாலும் கற்பனைக் கதைகளைப் படிப்பதில் மகிழ்ச்சியடைகின்றனர், அதற்குப் பதிலாக நீங்கள் ஸ்ரீமத் பாகவதத்தைப் படித்தால், அதை அதிகச் சுவையுடன் அனுபவிப்பீர்கள்; மேலும், அதே சமயத்தில் நீங்கள் தன்னுணர்வையும் அடைய முடியும்.

## சுவைமிக்க கிருஷ்ண கதை

ஸ்ரீமத் பாகவதத்தைச் செவியுற்ற பரீக்ஷித் மஹாராஜர், *நிவ்ருத்த-தர்ஷைர் உபகீயமானாத் பவௌஷதாச் ச்ரோத்ர-மனோ-'பிராமாத்,* "கிருஷ்ணரைப் பற்றிய வர்ணனைகள் ஜட வாழ்க்கை என்னும் நோயினால் துன்பப்படுபவர் களுக்கான சரியான மருந்தாகும். மேலும், அந்த வர்ணனைகள் கேட்பதற்கு மிகவும் இனிமையானவை, குறிப்பாக எல்லா பௌதிக ஆசைகளிலிருந்தும் விடுபட்டோருக்கு இவை அதிகச் சுவையை அளிக்கக்கூடியவை," என்று கூறுகிறார். (ஸ்ரீமத் பாகவதம் 10.1.4)

இந்த பௌதிக உலகம் பெரும்பாலும் ரஜோ குணத்தினாலும் தமோ குணத்தினாலும் செயல்படுத்தப் படுவதால், இவ்வுலகில் வாழும் காலம் வரை நீங்கள் ஏக்கத்தையும் வருத்தத்தையும் உணர்வீர்கள். ஏதாவது ஒன்றை அடைவதற்கு நாம் ஏங்குவது இயற்கை; அப்படி அப்பொருளை அடைந்து, அதன் பின்னர் அதனை இழந்துவிட்டால், நாம் வருந்துகிறோம். ஏக்கம், வருத்தம், மற்றும் இயற்கையின் கீழ் குணங்களின் இதர விளைவுகள் அனைத்தும், *அபத்ராணி,* "இதயத்தி லுள்ள அழுக்குகள்" எனப்படுகின்றன. ஆனால் ஸ்ரீமத் பாகவதத்தின் இந்த ஸ்லோகத்தில், நீங்கள் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டால் போதும், உங்கள் இதயத்திலிருந்து அத்தகு அசுத்தமான விஷயங்கள் படிப்படியாக பகவானா லேயே அகற்றப்படும் என்று சூத கோஸ்வாமி கூறுகின்றார்.

எல்லாவிதமான ஏக்கத்தையும் வருத்தத்தையும் கடந்த நபர்களால் கிருஷ்ணரைப் பற்றிய வர்ணனைகள் அதிகமாகச் சுவைக்கப்படும் என்று கூறும் பரீக்ஷித் மஹாராஜர், சாதாரண மக்களைப் பொறுத்தவரையில், இந்த வர்ணனைகள் *பவௌஷதாச் ச்ரோத்ர மனோ-'பிராமாத்*—காதுகளுக்கும் இதயத்திற்கும் இனிமையாகவும் பௌதிக வாழ்விற்கான சரியான மருந்தாகவும் அமையும் என்று கூறுகிறார்.

## கேட்பதற்கான வாய்ப்பை வழங்குதல்

எனவே, கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதற்கான வாய்ப்பை பொது மக்களுக்கு வழங்குவதே இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தில் எங்களுடைய

**குரு சீடப் பரம்பரையின் மூலம் பெறப்பட்ட சைதன்ய மஹாபிரபுவின் உயர்ந்த உத்தரவின்படி, நான் கிருஷ்ண கதையைப் பிரச்சாரம் செய்ய முயற்சி செய்கிறேன், இதுவே எனது தகுதி. கிருஷ்ண உணர்வின் வழிமுறையை நான் உற்பத்தி செய்யவில்லை. கிருஷ்ணரின் செய்திகளை உள்ளது உள்ளபடி கொடுக்கும் தூதுவன் நான், அவ்வளவுதான். அந்த செய்திகளில் நான் எந்த கலப்படமும் செய்யாததால் அவை சக்தி வாய்ந்தவையாக உள்ளன.**

திட்டமாகும். இதுவே எங்களின் குறிக் கோள், இதனை சைதன்ய மஹாபிரபு எங்களுக்குக் கொடுத்துள்ளார்.

யாரே தேக, தாரே கஹ 'க்ருஷ்ண'-
உபதேஷ
ஆமார ஆக்ஞாய குரு ஹணா தார'
ஏய் தேஷ

"என்னுடைய உத்தரவின்படி ஆன்மீக குருவாக மாறி, யாரை யெல்லாம் நீ சந்திக்கின்றாயோ அவர்கள் அனைவருக்கும் கிருஷ்ண உபதேசத்தை எடுத்துரைப்பாயாக," (சைதன்ய சரிதாம்ருதம், மத்திய லீலை, 7.128) என்று அவர் கூறியுள்ளார். கிருஷ்ண உபதேசம் என்பதில், பகவத் கீதையைப் போன்று கிருஷ்ணரால் பேசப்பட்ட வார்த்தைகளும், ஸ்ரீமத் பாகவதத்தைப் போன்று கிருஷ்ணரைப் பற்றிய வார்த்தைகளும் அடங்கும். இந்த இரண்டு விதமான கிருஷ்ண உபதேசங்களை உலகெங்கிலும் பரப்ப வேண்டுமென்று சைதன்ய மஹாபிரபு நமக்கு ஆணையிட்டுள்ளார்.

## குருவின் தகுதிகள்

"ஆன்மீக குருவாக இருப்பதற்கு உங்களுடைய தகுதி என்ன?" என்று இப்போது நீங்கள் என்னிடம் கேட்கலாம். குரு சீடப் பரம்பரையின் மூலம் பெறப்பட்ட சைதன்ய மஹாபிரபுவின் உயர்ந்த உத்தரவின்படி, நான் கிருஷ்ண உபதேசத்தை பிரச்சாரம் செய்ய முயற்சி செய்கிறேன், இதுவே எனது தகுதி. கிருஷ்ண உணர்வின் வழிமுறையை நான் உற்பத்தி செய்யவில்லை. கிருஷ்ணரின் செய்திகளை உள்ளது உள்ளபடி கொடுக்கும் தூதுவன் நான், அவ்வளவுதான். அந்த செய்திகளில் நான் எந்த கலப்படமும் செய்யாததால் அவை சக்தி வாய்ந்தவையாக உள்ளன, *ஸர்வ தர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் ஷரணம் வ்ரஜ:* "உன்னுடைய அபத்தங்கள் எல்லாவற்றையும் கைவிட்டு, என்னிடம் மட்டும் சரணடை வாயாக," என்று பகவத் கீதையில் (18.66) கிருஷ்ணர் கூறுகிறார். "கிருஷ்ணரின் பக்தனாக மாறு, கிருஷ்ணரிடம் சரணடை," என்று நான் அதே விஷயத்தைக் கூறுகிறேன். கிருஷ் ணரின் செய்திகளில் நான் கலப்படம் செய்வ தில்லை, கிருஷ்ணரின் செய்திகளுக்கு நான் தவறான விளக்கம் கொடுப்பதில்லை; இதனால், நான் அவரது விருப்பங்களைப் பிரதிநிதிக்கின்றேன் என்பதில் சந்தேகம் இல்லை. இச்செய்தி களின் பலன்களை நாம் கண்கூடாகக் கண்டு வருகிறோம்.


பரம்பொருளைத் தேடுவோர் எங்களிடம் அதைப் பற்றிக் கேட்டால், கிருஷ்ணரே பரபிரம்மன் என்று உடனடியாகக் கூறுவோம்.

நான் மேற்கத்திய உலகிற்கு வருவதற்கு முன்பு, இந்தியாவிலிருந்து பலரும் இங்கு வந்து பகவத் கீதையை போதித்துள்ளனர். அவர்களில் சிலர் பெரிய பண்டிதர்கள். ஆனால் அவர்கள் கிருஷ்ணரின் போதனைகளை உள்ளது உள்ளபடி பிரச்சாரம் செய்யாததால், எந்த மேற்கத்தியரும் பக்தி யோகம் அல்லது கிருஷ்ண உணர்வின் தத்துவங்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. தற்போது பார்த்தால், மேற்கத்திய நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கானோர், குறிப்பாக இளைஞர்கள் இதை ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்களில் பலர் பௌதிக முன்னேற்றத்தில் ஆர்வத்தை இழந்துவிட்டனர், அதை அனுபவித்து விரக்தியடைந்துள்ளனர்; தற்போது ஆன்மீக முன்னேற்றத்தைத் தேடுகின்றனர். வேதாந்த சூத்திரத்தின் தொடக்கத்தில் விளக்கப்பட்டுள்ள, *அதாதோ ப்ரஹ்ம-ஜிக்ஞாஸ*, என்னும் தளத்திற்கு இவர்கள் வந்துள்ளனர். "இந்த மனிதப் பிறவியில் ஒருவர் பிரம்மனைப் (பூரண உண்மையைப்) பற்றி கேள்வி எழுப்ப வேண்டும்." எங்களிடம் அவர்கள் இதைப் பற்றி கேள்வியெழுப்பினால், உடனடியாக, பகவத் கீதையின்படி கிருஷ்ணரே பூரண உண்மை (பரபிரம்மன்) என்பதை நாங்கள் விளக்குகின்றோம். கிருஷ்ணர் யார் என்பதைப் புரிந்து கொண்டபோது அர்ஜுனனும் அதைத்தான் அறிவித்தான்: *பரம் ப்ரஹ்ம பரம் தாம பவித்ரம் பரமம் பவான்.* "நீங்களே பரம புருஷ பகவான், (எல்லா உயிர்களின்) இறுதியான வாசஸ்தலம், மிகவும் தூய்மையானவர், பரம சத்யம்." (பகவத் கீதை 10.12) எனவே, பரம்பொருளைப் பற்றிய கேள்வி வரும் போது, கிருஷ்ண கதையை வழங்கி அக்கேள்வியை திருப்திப்படுத்த எங்களால் முடியும்.

## இதயத்தைத் தூய்மைப்படுத்துதல்

எனவே, ஒவ்வொருவரும் கிருஷ்ண பக்தி இயக்கத்தில் இணைய வேண்டும். கிருஷ்ண கதையைக் கேட்டு, சைதன்ய மஹாபிரபுவின் கட்டளையின்படி இந்த

ஞானத்தை விநியோகம் செய்தால் போதும். இதன் முடிவு இங்கு ஸ்ரீமத் பாகவதத்தில் சூத கோஸ்வாமி விளக்குவது போன்று இருக்கும், *ஷ்ருண்வதாம் ஸ்வ-கதா: க்ருஷ்ண: புண்ய-ஷ்ரவண-கீர்தன:* கிருஷ்ண கதை மிகவும் அருமையானது, இதைக் கேட்டால் மட்டும் போதும், அஃது ஒருவனை புண்ணியவானாக மாற்றும். கிருஷ்ணர் யார் என்று தெரியாவிட்டாலும், ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்னும் திருநாமங்களின் ஒலியதிர்வுகளைக் கேட்டால் போதும், புண்ணியம் நிறைந்தவனாக ஆக முடியும். சைதன்ய மஹாபிரபு தனது சிக்ஷாஷ்டகத்தில், *சேதோ-தர்பன-மார்ஜனம்* என்று கூறியிருப்பதுபோல், கிருஷ்ண கதை இதயத்தைத் தூய்மைப்படுத்துவதில் மிகவும் சக்தி வாய்ந்ததாகும். கிருஷ்ணர் நம் இதயத்தில் பரமாத்மாவாக வீற்றுள்ளார், அவரைப் பற்றிக் கேட்பதில் நாம் மிகவும் தீவிரமாக உள்ளோம் என்பதை அவர் புரிந்து கொண்டவுடன், நமது இதயத்தைத் தூய்மைப்படுத்தி நமக்கு உதவுகிறார்.

## அனைத்தும் அவருக்கே சொந்தம்

நம் இதயத்திலுள்ள அசுத்தமான விஷயங்களுக்கு, *அபத்ராணி*, "இழிவானது" என்னும் சரியான வார்த்தை இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. *பத்ரா* என்றால் உயர்ந்தது அல்லது சிறப்பானது என்றும், *அபத்ரா* என்றால் இழிவானது என்றும் பொருள்படும். எனவே, நமது இதயத்தில் இழிவானது எது? இறைவனின் சொத்துகளின் மீது நாம் உரிமை கொண்டாடுதல் இழிவானதாகும். இதற்கான நல்ல உதாரணம், தேசியவாதம். பல்வேறு மக்கள் இதனை மிகவும் புகழத்தக்க விஷயமாகக் கருதுகின்றனர், ஆனால் உண்மையில் தேசியவாதம் மிகவும் இழிவானதாகும். நாங்கள் ஏன் இவ்வாறு கூறுகிறோம்? ஈஷோபநிஷத்தின் (முதல் மந்திரத்தின்) பலத்தினால் நாங்கள் இவ்வாறு கூறுகிறோம்.

*ஈஷாவாஸ்யம் இதம் ஸர்வம்*
*யத் கிஞ்ச ஜகத்யாம் ஜகத்*
*தேன த்யக்தேன புஞ்ஜிதா*
*மா க்ருத: கஸ்ய ஸ்வித் தனம்*

"இப்பிரபஞ்சத்திலுள்ள அனைத்து உயிருள்ள பொருள்களும் உயிரற்ற பொருள்களும் பகவானுக்குச் சொந்தமானவை, பகவானால் கட்டுப்படுத்தப் படுபவை. எனவே, ஒருவர் தனக்காக ஒதுக்கப்பட்டுள்ள தேவையான பங்கை மட்டுமே ஏற்றுக் கொண்டு, மற்றவை யாரைச்சார்ந்தவை என்பதை நன்கறிந்து அவற்றை ஏற்றுக்கொள்ளக் கூடாது."

எல்லாமே கடவுளுக்குச் சொந்தமானது என்று ஈஷோபநிஷத் கூறுகிறது. அவ்வாறு இருக்கையில், "இஃது அமெரிக்காவின் நிலம்," "இஃது இந்தியாவின் நிலம்" என்று நீங்கள் எவ்வாறு உரிமை கொண்டாட முடியும்? இது வெறும் மாயையே. எது உங்களுடையதில்லையோ அதை உங்களுடையதாக உரிமை கொண்டாடுகிறீர்கள். உங்கள் உடல்கூட உங்களுக்குச் சொந்தமானதல்ல; உங்களுடைய கர்மாவிற்கு ஏற்ப இயற்கை உங்களுக்கு இவ்வுடலை அளித்துள்ளது. ஆனால் இறுதியில் பார்த்தால், உங்களுடைய உடல் கிருஷ்ணருக்குச் சொந்தமானது. நான் ஒரு வாடகை வீட்டில் தங்கியிருந்தால், அஃது என்னுடைய வீடாகாது. அந்த வீட்டிற்கென்று ஓர் உரிமையாளர் உள்ளார், இதுவே உண்மை. ஆனால், அந்த வீட்டிற்குச் சென்று, "இஃது என் வீடு" என்று நான் உரிமை கொண்டாடினால், நான் சிக்கலில் மாட்டிக் கொள்வேன். அதுபோலவே, நாம் நமது வசதிக்காகவும் வாழ்விற்காகவும் பயன்படுத்தும் அனைத்தும் பகவானால் நமக்கு அளிக்கப்பட்டவை. இவ்வுடலும் அவரால் கொடுக்கப்பட்டதே. உடலைப் பராமரிப்பதற்குத் தேவையானவை அனைத்தையும் கடவுளே கொடுக்கின்றார்; பழங்கள், தானியங்கள், பால் போன்றவை மட்டுமின்றி, மாமிசம்கூட அவர்தான் கொடுக்கின்றார். இவற்றை உண்டு நீங்கள் உங்கள் உடலைப் பராமரிக்கின்றீர்கள். உங்களுடைய தொழிற்சாலைகளில் இவற்றை உற்பத்தி செய்ய முடியாது. *ஏகோ பஹூனாம் விததாதி காமான்*, "ஒவ்வொருவரின் தேவைகளையும் பகவானே திருப்தி செய்கிறார்," என்று வேதங்கள் கூறுகின்றன. எல்லாமே கடவுளுக்குச் சொந்தம் என்பதைப் புரிந்துகொள்வதே கிருஷ்ண உணர்வாகும்.


**எல்லாமே கடவுளுக்குச் சொந்தமானது என்று ஈஷோபநிஷத் கூறும்போது, "இஃது அமெரிக்காவின் நிலம்," "இஃது இந்தியாவின் நிலம்" என்று நீங்கள் எவ்வாறு உரிமை கொண்டாட முடியும்?**

கடவுளின் சொத்துக்களை நம்முடையதாக உரிமை கொண்டாடுவது உட்பட, நமது இதயத்தில் தற்போது பல்வேறு இழிவான எண்ணங்கள் உள்ளன. ஆனால் கிருஷ்ணர் நமது இதயத்தில் வீற்றிருப்பதால், இடைவிடாமலும் தீவிரமாகவும் நாம் கிருஷ்ண கதையைக் கேட்பதை அவர் கவனிக்கும் போது, இந்த இழிவான எண்ணங்கள் அனைத்தையும் அவர் கழுவி விடுவார். *ஹ்ருத்யந்த:-ஸ்தோ ஹ்யபத்ராணி விதுனோதி*. எனவே, ஸ்ரீமத் பாகவதம், பகவத் கீதை, மற்றும் இதர சாஸ்திரங்களிலிருந்து கிருஷ்ண கதையைக் கேட்பதற்கான வாய்ப்பை அனைவருக்கும் வழங்குவதன் மூலம், இந்த கிருஷ்ண பக்தி இயக்கமானது மனித சமுதாயத்தைத் தூய்மைப்படுத்துகின்றது; அத்தூய்மையினால் மனித சமுதாயம் அமைதியுடனும் மகிழ்ச்சியுடனும் வளமுடனும் வாழ முடியும்.

(தமிழாக்கம்: ஜெய கோவிந்தராம தாஸ்)

# துவாரகை

## பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அரண்மனை



**இந்நகரத்தின் உண்மையான செல்வச் செழிப்புகளை இன்று நம்மால் காண முடியாவிட்டாலும், இங்குள்ள மக்களின் புனிதத் தன்மையால் நாம் கவரப்படுவது உறுதி.**

*தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி*

முழுமுதற் கடவுளான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், இப்பூமியில் 5,000 ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியபோது, தன்னுடைய லீலையின் பெரும்பாலான காலத்தை துவாரகை என்ற நகரத்தில்தான் கழித்தார். 16,108 உருவங்களாக தன்னை விரிவாக்கம் செய்தது, 16,108 அரண்மனைகளை தன்னுடைய 16,108 இராணியர்களுக்காக உண்டாக்கியது போன்றவை உட்பட பல்வேறு அற்புதமான லீலைகளை அவர் நிகழ்த்தினார். விருந்தாவனத்தில் கிருஷ்ணர் ஓர் எளிய இடையர் குலச் சிறுவனாக வாழ்ந்தார்; ஆனால், துவாரகையில் செல்வச் செழிப்புமிக்க இளவரசராக வாழ்ந்தார்.

துவாரகை என்றால் "பரமனை அடைவதற்கான வாயில்," அல்லது "வாயில்கள் நிறைந்த நகரம்" என்பது பொருள். செல்வச் செழிப்புமிக்க நகரத்திற்கு பல வாயில்கள் இருப்பது பாரம்பரிய வழக்கம், இஃது அந்நகரத்தைப் பாதுகாப்பதில் அரசருக்கு இருக்கும் திறமையை வெளிப்படுத்துவதாகும். ஆனால் இன்றைய துவாரகையில், இஸ்கானின் பாதயாத்திரையின் நினைவாகவும் ஸ்ரீல பிரபுபாதரின் நூற்றாண்டு விழாவின் நினைவாகவும் 1988ஆம் ஆண்டு அந்நகரத்தின் முகப்பில், ஸ்ரீல பிரபுபாதர் நுழைவாயில் நிறுவப்படும் வரை, வேறு வாயில்கள் ஏதும் இல்லாமல்தான் இருந்தது.

உண்மையான துவாரகையானது, ஸ்ரீமத் பாகவதம், மஹாபாரதம் மற்றும் பல வேத நூல்களின்படி, கடலின் நடுவில் கோட்டை அமைக்கப்பட்டு கட்டப்பட்ட நகரமாகும். கிருஷ்ணரைக் கொல்லும் நோக்கத்துடன், அடுத்தடுத்து தாக்குதல் நடத்திய அரசர்களின் படையினரிடமிருந்து, யாதவர்களைக் (தனது உறவினர்களைக்) காப்பாற்றும் நோக்கத்துடன், கிருஷ்ணர் துவாரகையை நிர்மாணித்தார். இவ்வுலகிலிருந்து பகவான் புறப்பட்ட சமயத்தில், அவரது விருப்பத்தின்படி, துவாரகை கடலில் மறைந்து விட்டது. அகழ்வாராய்ச்சியின் போது கடலிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பல்வேறு கலை நுணுக்கம் வாய்ந்த பொருட்கள், செல்வச் செழிப்புமிக்க நகரம் ஒன்று இங்கு இருந்ததை பறைசாற்றுகின்றன.

இன்றைய துவாரகை நகரம் கடற்கரையில்அமைந்துள்ளது. இந்நகரம் ஏறத்தாழ 30,000 நகரவாசிகளையும், பருவ காலத்திற்கு ஏற்ப பல்வேறு யாத்திரிகர்களையும் கொண்டுள்ளது. இது தொலைதூரத்தில், மேற்கத்திய கடற்கரையை ஒட்டி, எந்தவொரு பெரிய நகரத்திற்கும் அருகில் இல்லை என்றபோதிலும், பல யாத்திரிகர்கள் இங்கு வருவதற்கு பிரயத்தனப்படுகிறார்கள். குளிர்ந்த ஜனவரி மாதத்தின் காலைப் பொழுதில், புத்தக விநியோகம் செய்யும்



துவாரகையின் முழு தோற்றத்தை கலங்கரை விளக்கத்திலிருந்து காணலாம்

குழுவினருடன் நான் இங்கு வந்தபோது, கிழக்குக் கடற்கரையில் அமைந்துள்ள தமிழ்நாடு, மேற்கு வங்காளம் ஆகிய இடங்களிலிருந்து வந்திருந்த பேருந்துகளைக் காண முடிந்தது.

துவாரகை இந்துக்களுக்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ஏனெனில், இந்தியாவின் நான்கு திசைகளில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற புண்ணியஸ்தலங்களில் இதுவும் ஒன்று: தெற்கில் இராமேஸ்வரம், வடக்கில் பத்ரிநாத், கிழக்கில் பூரி, மேற்கில் துவாரகை.

குஜராத் மாநிலத்திலிருந்து துவாரகையைக் காணவரும் பார்வையாளர்கள் பலர். நகரவாசிகள், அலுவலகத்தின் விடுமுறை நாள்களிலும் வாரத்தின் இறுதியிலும் வருகின்றனர், கிராமத்தினரோ அவர்களின் விவசாயத்தைப் பொறுத்து வாரத்தின் எந்த நாளிலும் துவாரகையைக் காண வருகின்றனர். கிராமத்தினர் வழக்கமாக நன்கு அலங்கரிக்கப்பட்ட பிரகாசமான வண்ணத்துடன் கூடிய பல வகையான கொடிகளை ஏந்தி குழுக்களாக துவாரகைக்கு வருகின்றனர்.

இக்கொடிகளை கோவிலில் கொடுத்த பிறகு, பிராமணர்களுக்கு உணவளித்தல் என்னும் புண்ணிய செயல்களில் அவர்கள் ஈடுபடுகின்றனர். யாத்திரிகர்கள் தாங்கள் கொண்டு வந்த கொடி, கோவிலின் உச்சியில் பறப்பதைப் பார்க்கும்போது அதிக திருப்தி அடைகின்றனர். (கொடிகளை மாற்றுவதற்கு கோவில் ஊழியர் கோவிலின் கோபுரக் கலசத்தின் உச்சிக்கு ஏற வேண்டும். 235 அடி உயரம் கொண்ட அக்கோபுரத்தில் ஏறும்போது, கடுமையான கடல் காற்று வீசுவது சகஜம். ஆனால் அதை ஊழியர்கள் பொருட்படுத்துவதாகத் தெரியவில்லை.)

துவாரகையின் சூழ்நிலை மிகவும் அமைதியாக உள்ளது. பக்தியுடன் இருக்கும் இம்மக்கள் அதிகமான பிரச்சனைகளால் அலைக்கழிக்கப்படுவதில்லை, மகிழ்ச்சியுடன் பகவானைக் காண கோவிலுக்குச் செல்கிறார்கள். நாங்கள் அதிகாலை 6:30 மணிக்கு துவாரகையை வந்தடைந்தோம். அப்போது இருட்டாக இருந்த போதிலும், அங்குள்ள முக்கிய கோவிலை நோக்கி பல்வேறு மக்கள் நடந்து சென்றதைக் காண முடிந்தது. இக்கோவிலில், துவாரகாதீஷ் (துவாரகையின் ஈஷ்வரன்) என்று அழைக்கப்படும் கிருஷ்ணர், நான்கு கைகளுடன் காட்சி தருகிறார். கிருஷ்ணரின் கருணையால் துவாரகையின் செல்வச் செழிப்பு இன்றும் நிலைத்து நிற்கின்றது. பெரிய பணக்காரர்களை இங்கு காண முடியாவிட்டாலும், சாதாரண மக்களும் சுகமாக வாழ்ந்து வருவதைக் காணலாம்.


## ராஜ உபசரிப்பு

துவாரகையில் பகவான் கிருஷ்ணர் ஓர் இளவரசராக வசித்ததால், அவர் அதே பாவனையில் இங்கு வழிபடப்படுகின்றார். விக்ரஹம் மிகவும் ஆடம்பரமான முறையில் அலங்கரிக்கப்பட்டு, நான்கு கைகளிலும் உள்ள (சங்கு, சக்கரம், கதை, தாமரை ஆகிய) அடையாளச் சின்னங்கள் வெள்ளியால் கவசமிடப்பட்டுள்ளன. பூஜையின்போது, பிராமணர்கள் சிகப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் பஞ்சகச்சத்தையும், கோவிலின் உச்சியில் பறந்து கொண்டிருந்த கொடிகளிலிருந்து தைக்கப்பட்ட சட்டைகளையும் உடுத்தியபடி, மேளங்களை அடித்துக் கொண்டு சங்குகளை முழங்குகின்றனர்.

பதினாறாம் நூற்றாண்டில் கட்டப்பட்ட இந்த துவாரகாதீஷ் கோவிலில், ஸ்ரீமதி லட்சுமி தேவி, சிவபெருமான், ஸ்ரீமதி ராதிகா, ஸ்ரீ பலராமர், ஸ்ரீ பிரத்யும்னர், ஸ்ரீ அனிருத்தர். ஸ்ரீமதி ஜாம்பவதி, ஸ்ரீமதி



துவாரகாதீஷ் விக்ரஹத்தின் ஒரு வரைபடம்







**மேலே:** துவாரகாதீஷ் கோவிலின் பிரம்மாண்டத் தோற்றம்

**வலது மேலே:** ஸ்ரீல பிரபுபாதரின் நினைவாகக் கட்டப்பட்டுள்ள துவாரகையின் முக்கிய வாயில்

**வலது:** துவாரகாதீஷரை தரிசிக்க தங்களது பாரம்பரிய உடையில் வந்திருந்த விவசாயிகள்

சத்யபாமா, ஸ்ரீ புருஷோத்தம விஷ்ணு ஆகியோரது உட்பட பல்வேறு சிறிய சன்னிதிகளும் உள்ளன.

துவாரகாதீஷரின் கோவிலுக்கு நேராக இருப்பது, கிருஷ்ணருடைய தாயாரான தேவகியின் சன்னிதி. அவள் கிருஷ்ணரைப் பார்க்கின்றாள், கிருஷ்ணரும் அவளைப் பார்க்கின்றார். மங்கள ஆரத்திக்குப் பிறகு, தேவகியின் சன்னிதியில் பிரகாசமான ஆடைகளை அணிந்த பிராமணச் சிறுவர்கள் வேத மந்திரங்களை ஓதும்போது அது மிகவும் இதமான, மங்களகரமான சூழ்நிலையை உண்டாக்குகிறது.

ஒருநாள் துவாரகாதீஷரின் கோவிலில் நாங்கள் கீர்த்தனை செய்த போது, விக்ரஹத்திற்கு சேவைகள் செய்து வரும் பூஜாரி, புன்னகையினால் தனது பாராட்டைத் தெரிவித்ததுடன் கைகளை உயர்த்தி கிருஷ்ண நாமங்களின் ஓசைக்கேற்றவாறு லேசாக ஆடிக்கொண்டிருந்தார்.

## மதம் சார்ந்த கூட்டங்கள்

துவாரகை, அருமையான கடற்கரையைக் கொண்ட ரம்யமான நகரம், இங்குள்ள கடல் அமைதியாக உள்ளது. கோடையில் அதிக வெப்பம் இல்லாமலும் குளிர்காலத்தில் அதிகக் குளிர் இல்லாமலும், இங்குள்ள தட்பவெப்பம் மிதமானதாக உள்ளது. கோடை காலத்தில், நாட்டின் மற்ற பகுதிகளில் இருக்கும் வெப்பம் இங்கு இல்லை என்பதால், ஆன்மீகச் சொற்பொழிவாளர்கள் அச்சமயத்தில் இங்கு வருவது வழக்கம், அவர்களின் சொற்பொழிவுகளைக் கேட்க பலதரப்பட்ட மக்களும் கூடுவார்கள். இம்மாதிரியான கூட்டங்களை நடத்த துவாரகை ஒரு முக்கிய இடமாகக் கருதப்படுகிறது.

இந்தியாவின் புனித நதிகளில் ஒன்றான கோமதி, கடலில் கலக்கும் இடத்தில் சமுத்திர நாராயணரின் கோவில் அமைந்துள்ளது. சமுத்திர நாராயணர், பகவான் கிருஷ்ணரின் விரிவங்கமாக கர்பக் கடலில் பள்ளி கொண்டிருக்கும் பகவான் நாராயணர் ஆவார். இப்பழைய கோவில் மட்டுமே சமுத்திர நாராயணருக்கென்று இருக்கும் ஒரே கோவிலாகும்.



பெட் துவாரகை தீவிலுள்ள கோவிலுக்கு பக்தர்களை ஏற்றிச் செல்லும் படகு

## இதர முக்கிய கோவில்கள்

நதியின் முகத்துவாரத்திலுள்ள ஓர் ஆஷ்ரமத்தில் பல்வேறு சாதுக்கள் வசிக்கின்றனர். இவர்களில் சிலர் முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு வசித்து வருகின்றனர். சிலர் தாங்களாகவே சமைத்துக் கொள்கின்றனர், வேறு சிலர் இலவச உணவு விநியோகிக்கப்படும் அன்னக்ஷேத்திரத்திற்குச் செல்வதுண்டு. எளிமையாக வாழ்ந்து, பலவிதமான ஆன்மீகப் பயிற்சிகளில் ஈடுபடும் இவர்களுடைய வாழ்க்கை பௌதிகப் புலனுகர்ச்சிக்கானது அல்ல.

கோமதி நதி கடலை அடைவதற்கு முன்பாக பல கிளைகளாகப் பிரிந்துள்ளது; அதனால் ஏற்பட்ட சிறு தீவில் இலட்சுமி நாராயணர் கோவில் அமைந்துள்ளது. இவ்விடம் மிகவும் புராதனமானது என்றாலும், இங்குள்ள தற்போதைய கோவில் அவ்வளவு பழமையானது அல்ல.

அருகிலுள்ள சாலையில், 'ஸ்ரீராம, ஜயராம, ஜய ஜய ராம' என்று நாற்பது வருடங்களாகத் தொடர்ந்து கீர்த்தனம் நடைபெறும் கோவிலைக் கண்டோம். அங்கு கீர்த்தனம் செய்து கொண்டிருந்த இருவர் எங்களையும் அவர்களுடன் இணைந்து கொள்ள அழைத்தனர். நாங்கள் பகல் வேளையில் சென்றபோது, அங்கு சிலர் மட்டுமே இருந்தனர்; மாலையில் அதிக மக்கள் வந்தனர். மேலும், பகவான் இராமரின் திருநாமத்தை கீர்த்தனம் செய்ய திருவிழாக் காலங்களில் அதிக மக்கள் கூடுகின்றனர்.

கண்டுகளிக்க உகந்த மற்றொரு இடம் இங்குள்ள கலங்கரை விளக்கம். (மாலை 4:30 மணி முதல் 6:00 மணிவரை மட்டுமே திறக்கப்பட்டிருக்கும்) இதன் உச்சியிலிருந்து கடலின் அற்புத காட்சியையும் துவாரகை நகரத்தையும் நகரத்திற்கு அப்பாலுள்ள வறண்ட சமவெளியையும் காண முடியும்.

## பெட் துவாரகை

துவாரகையிலிருந்து 30 கிலோமீட்டர் சென்றால், ஓஃகா என்னும் கிராமம் வருகிறது. இங்கு வரும் பெரும்பாலான மக்கள், இங்கிருந்து இருபது நிமிட படகுச் சவாரியில் பெட் துவாரகைக்குச் செல்வதற்காகவே வருகிறார்கள். பெட் என்றால் குஜராத்தி மொழியில் "தீவு" என்று பொருள்படும்; இத்தீவின் மத்தியில் பழைய துவாரகாதீஷ் கோவில் ஒன்று அமைந்துள்ளது. இங்குள்ள மக்கள் பெட் துவாரகையை பெருமையுடன் போற்றுகின்றனர், இதுவே "உண்மை யான துவாரகை" என்று உரிமைகூட கொண்டாடுகின்றனர்.

பெட் துவாரகைக்குச் செல்லும் பாதி வழியில், பிரதான சாலையிலிருந்து ஐந்து கிலோமீட்டர் தொலைவில், விருந்தாவனத்திலிருந்து வந்த கோபியர்களை கிருஷ்ணர் சந்தித்த "கோபி தலாவ்" என்ற குளம் உள்ளது. கிருஷ்ண பக்தர்கள் தங்களது நெற்றியை அலங்கரிப்பதற்குப் பயன்படுத்தக்கூடிய கோபி சந்தனம் (ஒருவித களிமண்) இப்புனித ஸ்தலத்தில்தான் கிடைக்கின்றது. ஒவ்வொருவரும் இதை இலவசமாக எடுத்துக் கொள்ள அனுமதிக்கப்படு கின்றனர். அடுத்த சில ஆண்டுகள் வரை பயன்படுத்துவதற்குத் தேவையான அளவு கோபி சந்தனத்தை நாங்கள் சேகரித்துக் கொண்டோம்.

துவாரகைக்கு வெளியில், பெட் துவாரகை செல்லும் சாலையில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் கிருஷ்ணரின் முக்கிய இராணியான ஸ்ரீமதி ருக்மிணியின் கோவில் உள்ளது. அழகான கட்டிடக் கலையைக் கொண்ட இக்கோவிலின் சுவர்களை கிருஷ்ண ருக்மிணியின் லீலைகள் அடங்கிய வண்ண ஓவியங்கள் அலங்கரிக்கின்றன.



கோபி சந்தனத்தைத் தோண்டி எடுக்கும் பக்தர்கள்

இக்கோவில் பன்னிரண்டாம் நூற்றாண்டில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது.

நகர வாழ்வின் நெரிசலிலிருந்தும் விரக்தியிலிருந்தும் ஓய்வு பெற்று, சில நாள்கள் தங்கி கண்டுகளிக்க துவாரகை மிகவும் உகந்த இடம். யாத்திரிகர்கள் நிதான புத்தியுடன் வாழ்வின் இறுதிக் குறிக்கோளைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பதற்கும் அங்கு செல்வது சிறந்தது.

''பூமியைக் காட்டிலும் ஸ்வர்க லோகங்கள் அதிகம் புகழப்படுகின்றன. ஆனால் பகவான் கிருஷ்ணர் துவாரகையின் மன்னராக இருந்த காரணத்தினால், பூலோகத்தின் புகழ் ஸ்வர்க லோகத்தின் புகழையும் தோற்கடித்துவிட்டது. விருந்தாவனம், மதுரா, துவாரகை ஆகிய மூன்று இடங்கள் இப்பிரபஞ்சத்திலுள்ள பிரசித்தி பெற்ற கிரகங்களைவிட மிகவும் முக்கியமானவை. இவ்விடங்கள் என்றுமே புனிதமானவை; ஏனெனில், எப்போதெல்லாம் பகவான் இந்த பூலோகத்திற்கு இறங்கி வருகின்றாரோ, அப்போதெல்லாம் அவர் தன்னுடைய உன்னதமான லீலைகளைப் பெரும்பாலும் இவ்விடங்களில் வெளிப்படுத்துகிறார். இவை பகவானின் நித்தியமான புனித இடங்கள்; இந்த தாமத்தில் (புண்ணிய ஸ்தலத்தில்) வசிப்பவர்கள், தங்களது பார்வையில் பகவான் இல்லாதபோதிலும், இந்த புனித ஸ்தலங்களை ஆன்மீக முன்னேற்றத்திற்காகப் பயன்படுத்துகிறார்கள்,'' என்று ஸ்ரீல பிரபுபாதர் எழுதியுள்ளார். (ஸ்ரீமத் பாகவதம், 1.10.27 பொருளுரை)



கிருஷ்ணரின் முக்கிய இராணியான ருக்மிணி தேவியின் திருக்கோவில்

துவாரகையில் இருந்து புறப்பட்ட போது, புகைப்படம் எடுப்பதற்காக சாலையில் நின்றோம். இந்த சிறிய நகரம், கோமதி நதியின் குறுக்கே சமவெளிப் பகுதியிலிருந்து எழுவதைக் காண முடிகிறது. துவாரகையிலுள்ள பல்வேறு கோவில்களின் கலசங்கள், நம்முடைய இலக்கு இவ்வுலகில் இருப்பது அல்ல, மேலே செல்ல வேண்டும் என்று கூறுவதுபோல உள்ளன. துவாரகாதீஷரின் கோவில் அடிவானத்தில் ஆட்சி செய்வதையும், அதற்குப் பின்னால் சற்றே தொலைவில் கலங்கரை விளக்கம் காட்சி தருவதையும் காண முடிகிறது.



நிருக குண்டம், பகவான் கிருஷ்ணர் மன்னர் நிருகனை சாபத்திலிருந்து விடுவித்த இடம்

புகைப்படம் எடுப்பதற்காக நாங்கள் நின்ற சில நிமிடங்களில், யாத்திரிகர்களைக் கொண்ட பல பேருந்துகள் அங்கு விரைந்தன. இங்குள்ள வாழ்க்கைச் சக்கரம் பல்வேறு நூற்றாண்டுகளாக இப்படித்தான் சுழன்று வருகின்றது: புதிய யாத்திரிகர்கள் வருவார்கள், மற்றவர்கள் கிளம்பிச் செல்வார்கள். பழங்காலத்தில் மக்கள் நடைப்பயணமாக வந்தனர், செல்வந்தர்கள் குதிரைகளிலும் பல்லக்கிலும் வந்தனர்; ஆனால் தற்போதைய மக்கள் பெரும்பாலும் இரயில் மூலமாகவும் பேருந்துகள் மூலமாகவும் வருகின்றனர். இருப்பினும், மக்களின் சுழற்சி அன்றும் இன்றும் என்றும் இருந்துகொண்டே உள்ளது.

இப்போது துவாரகையிலிருந்து விடைபெறுகிறோம். மீண்டும் எப்போது வருவோம் என்று தெரியாது, ஆனால் நிச்சயமாக வருவோம் என்று நம்புகிறோம். மேலும், ஆன்மீக உலகிலுள்ள துவாரகைக்குச் செல்ல நாங்கள் ஆசைப்படுகின்றோம். நம்முடைய அந்த நித்தியமான இலக்கை நினைவுபடுத்துவதற்காக, அந்த துவாரகையின் மாதிரி வடிவத்தை பகவான் கிருஷ்ணர் கருணையுடன் இங்கு விட்டுச் சென்றுள்ளார்.

தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி, இங்கிலாந்தில் பிறந்து கடந்த 35 வருடங்களாக இஸ்கானில் தொண்டு செய்து வருபவர். ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடரும், மூத்த சந்நியாசியுமான இவர், பல்வேறு புத்தகங்களுக்கு ஆசிரியருமாவார்.

(தமிழாக்கம்: ஜெய கோவிந்தராம தாஸ்)

# கிருஷ்ணர்...

## வழங்கியவர்: ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி கோஸ்வாமி மஹாராஜ பிரபுபாதர்

இந்த தொகுப்பின் ஆசிரியரான ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர், அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தை ஸ்தாபித்த ஸ்ரீல பிரபுபாதரின் குரு ஆவார். அறிஞர் என்று எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இவர், பல சாஸ்திரங்களை மொழிபெயர்த்து சமஸ்கிருத, வங்காள, ஆங்கில மொழிகளில் விளக்கமும் கொடுத்துள்ளார். இந்தியா முழுவதும் 64 மடங்களைத் தோற்றுவித்து, கிருஷ்ண உணர்வின் தத்துவத்தை பரவச் செய்தார். தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதரை மேற்கத்திய நாடுகளுக்கு அனுப்பி, அதன் மூலமாக உலகம் முழுவதும் கிருஷ்ண உணர்வு பரவுவதற்கு வித்திட்டவரும் இவரே.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திவ்யமான குணங்களை, ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர், ஸ்ரீமத் பாகவதத்தின் பத்தாவது காண்டத்திலிருந்து ஒரு நீண்ட கட்டுரையாக 1932இல் தொகுத்தார். அதனை பகவத் தரிசனத்தின் வாசகர்களுக்காக நான்கு பாகங்களாக வெளியிடுகிறோம்.

### பாகம் ஒன்று

கிருஷ்ணர் அளவற்ற அறிவுத்திறன் கொண்டவர் (10.84.22).

கிருஷ்ணர் புலன்களால் பெறப்படும் அறிவினால் அணுக முடியாதவர் (10.16.46).

கிருஷ்ணர் எல்லையற்ற உலகங்களின் இறைவன் (10.69.17).

கிருஷ்ணர் அளவற்ற சக்தியை உற்பத்தி செய்யும் அதிகாரம் கொண்டவர் (10.87.28).

கிருஷ்ணர் வரம்பில்லாத அதிகாரத்தை ஏந்திச் செல்பவர் (10.87.14).

கிருஷ்ணர் புரிந்துகொள்ள முடியாத (அசிந்திய) ஆற்றலைப் பெற்றவர் (10.10.29).

கிருஷ்ணர் பிறப்பற்றவர் (10.59.28, 10.74.21).

கிருஷ்ணர் பல்வேறு முரண்பட்ட கருத்துகளுக்கும் தீர்வு காண்பவர் (10.74.24).

கிருஷ்ணர் தூய பக்தியினால் வீழ்த்தப்படக் கூடியவர் (10.14.3).

கிருஷ்ணர் அந்தரங்க வழிகாட்டி (10.1.17).

கிருஷ்ணர் ஒழுக்கமற்றவர்களின் சக்தியை நிறுத்தி வைப்பவர் (10.60.19).

கிருஷ்ணர் தற்பெருமை இல்லாத ஜீவன்களுக்கு முக்தியளிப்பவர் (10.86.48).

கிருஷ்ணர் இறுமாப்பு கொண்ட ஜீவன்களுக்கு உலகச் செயலை வகுத்துக் கொடுப்பவர் (10.86.48).

கிருஷ்ணர் முதன்மையான கடவுள் (10.40.1).

கிருஷ்ணர் முதன்மையான (ஆதி) புருஷர் (10.63.38).



கிருஷ்ணர் அளவற்ற ஆனந்தத்தின் இருப்பிடம் (10.83.4).

கிருஷ்ணர் பூர்த்தி செய்யப்பட்ட ஆசைகளைக் கொண்டவர் (10.47.46).

கிருஷ்ணர் தன்னில் இன்பத்தை காண்பவர் (10.60.20).

கிருஷ்ணர் புலன்களுக்கு எதிரானவர் (10.60.35).

கிருஷ்ணர் தலைசிறந்த பாடல்களால் பாடப்படு பவர் (10.86.23).

கிருஷ்ணர் போலி மதங்கள் என்னும் இருளை மறையச் செய்பவர் (10.14.40).

கிருஷ்ணர் என்றும் அதிகரிப்பதோ குறைவதோ இல்லை (10.48.26).

கிருஷ்ணர் பௌதிகப் படைப்பின் அனைத் திற்கும் காரணமானவர் (10.10.29).

கிருஷ்ணர்தான் ஒரே உண்மை (10.14.23).

கிருஷ்ணர் செயல்களுக்கு ஏற்ற பலனைக் கொடுப்பவர் (10.49.29).

கிருஷ்ணர் தனது செயல்களின் வினைகளுக்கு உட்படுவதில்லை (10.84.17).

கிருஷ்ணர் காரணத்தையும் விளைவுகளையும் பார்க்கக் கூடியவர் (10.38.12).

கிருஷ்ணர் கால புருஷர் (10.1.7).

கிருஷ்ணர் தன்னையே காலமாக ஆக்கிக் கொண்டவர் (10.70.26).

கிருஷ்ணர் காலத்தின் காலமாக இருப்பவர் (10.56.27).

கிருஷ்ணர் மரத்தினுள் இருக்கும் நெருப்பைப் போல எல்லா ஜீவன்களின் இதயத்திலும் இருக்கிறார் (10.46.36)

கிருஷ்ணர் விசுவாசம் கொண்டவர் (10.48.26).

கிருஷ்ணர் (நிலவைப்போன்று) பூமியிலுள்ள கடல்கள், தேவர்கள், பிராமணர்கள், விலங்குகள் என அதிகரிக்கக்கூடியவர் (10.14.40).

கிருஷ்ணர் மாமிசம் உண்பவர்களுக்குத் துன்பத்தைக் கொடுப்பவர் (10.14.40).


கிருஷ்ணர் அகந்தை கொண்டவனின் அகந்தையை அழிக்கக் கூடியவர் (10.60.19).

(தமிழாக்கம்: ஜீவன கௌரஹரி தாஸ்)




தேவர்களை வழிபடும் சிற்றறிவு படைத்த மக்களது பலன்கள், தற்காலிகமானதும் ஓர் எல்லைக்கு உட்பட்டதுமாகும். தேவர்களை வழிபடுவோர் தேவர்களின் உலகங்களுக்குச் செல்வர், ஆனால் எனது பக்தர்கள் இறுதியில் எனது உன்னத உலகை அடைகின்றனர்.

—பகவத் கீதையில் (7.23) பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்







**கருத்து: கிருஷ்ணரே முழுமுதற் கடவுள், மற்ற தேவர்கள் அனைவரும் அவரது சேவகர்களே; இதுவே எல்லா வேதங்களின் முடிவாகும்.**

# சேலத்தில் ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை

ஒரிசா மாநிலத்தின் பூரி நகரில் நடைபெறும் ஸ்ரீ ஜகந்நாதர் ரதயாத்திரை உலகம் முழுவதும் பிரசித்தி பெற்ற தேர் திருவிழாவாகும். இத்திருவிழாவின் பலனை உலகிலுள்ளோர் அனைவரும் பெற வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், உலகின் பல்வேறு முக்கிய நகரங்களில் ஸ்ரீல பிரபுபாதர் இதனைத் தொடக்கி வைத்தார். பூரியில் ரதயாத்திரை நடைபெற்ற ஜுலை 3ஆம் தேதியன்று, தமிழகத்தில் சேலம் மாநகரைச் சார்ந்த இஸ்கான் பக்தர்கள், ஸ்ரீ ஜகந்நாதர், ஸ்ரீ பலதேவர், ஸ்ரீமதி சுபத்ரை ஆகியோருடன் கூடிய ரதயாத்திரையை அன்றைய தினத்தில் சிறப்பாக நடத்தினர்.



சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் மாலை சுமார் 4:00 மணியளவில், கொட்டும் மழையில் தனது பக்தர்கள் ஆடிப்பாடி கொண்டாடியதை ரசித்த ஸ்ரீ ஜகந்நாதர், தனது சகோதர சகோதரியுடன் கம்பீரமாக சேலத்தின் முக்கிய வீதிகளில் வலம் வந்தார். வழியெங்கும் கூடிய மக்கள் அனைவருக்கும் பிரசாதம் விநியோகிக்கப்பட்டது. அக்ரஹாரம், ராஜகணபதி கோயில், பட்டை கோயில், மார்க்கெட் தெரு வழியாக இரவு 7 மணியளவில் ரதம் கோட்டை மைதானத்தை அடைந்தது. பின்பு, கோட்டை மைதானத்தில் பஜனை, கீர்த்தனம், ஆரத்தி, சொற்பொழிவு மற்றும் பிரசாத விநியோகமும் சிறப்பாக நடைபெற்றது. அமெரிக்காவைச் சேர்ந்த ஸ்ரீல பிரபுபாதரின் நேரடி சீடர்களும் தம்பதியருமான திரு.ஹரிபாததாஸ், மற்றும் திருமதி.பாலினிதேவிதாஸி ஆகியோர் நிகழ்ச்சியில் தலைமை விருந்தினராகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.



# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே




## திருநாமங்களைப் பாடி ஆடாத மனித வாழ்வின் பயன் என்ன?

வம்பு அவிழ் கோதைபொருட்டா,
மால் விடை ஏழும் அடர்த்த
செம்பவளத் திரள் வாயன்,
சிரீதரன் தொல் புகழ் பாடி
கும்பிடு நட்டம் இட்டு ஆடி,
கோகு உகட்டுண்டு உழலாதார்—
தம் பிறப்பால் பயன் என்னே
சாது சனங்களிடையே?

**செக்கச் சிவந்த பவளம்போன்ற உதடுகளை உடைய ஸ்ரீதரன் (திருமகளைத் தாங்கியவன்), மாலை சூடிய சத்யாவைக் கைப்பிடிக்க, ஏழு எருதுகளை அடக்கி வென்றான். அவன் புகழ் பாடி வணங்கிக் குதித்துக் கூத்தாடி, தலை மண்டியிட்டு ஆடி, அவனது சிறப்பான குணங்களில் தம்மை மறந்து உழலாத நபர்கள், சாது சனங்களிடையே மனிதப் பிறவி எடுத்ததன் பயன் என்ன? ஒரு பயனும் இல்லையே!**

(நாலாயிர திவ்ய பிரபந்தம், நம்மாழ்வார் 3168)



# யார்

## முழுமுதற் கடவுள்?

வழங்கியவர்: ஜெய கோபிநாத தாஸ்

கடவுள் இருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொள்வோர் மத்தியிலும், யார் கடவுள்? என்ற கேள்விக்கான விடை பெரும்பாலும் இல்லை.

இந்தியாவிலுள்ள பல வீடுகளில் பூஜை அறை முழுவதும் பல படங்களை வைத்திருப்பர். திங்கள் கிழமை ஒரு கடவுள், செவ்வாய் அன்று மற்றொரு கடவுள் என்று தினமும் ஒருவரை வழிபடுவர். பூஜை அறை முழுவதும் கடவுள்களின் கண்காட்சியைப் போல காட்சியளிக்கும். நவராத்திரிக்கு முன்பாக பல வீடுகளில் கொலு வைப்பர், எத்தனை கடவுள்கள்! இவையனைத்தையும் பார்க்கும்போது, உண்மையில் யார் கடவுள் என்ற கேள்வி சிந்தனை கொண்டோர் அனைவருக்குள்ளும் எழக்கூடிய ஒன்றே.

கடவுளை அறிவதற்கு வேதங்களே சிறந்த வழி என்பதை முன்பு (ஜனவரி இதழில்) கண்டோம். வேதங்களின் சாரமான பகவத் கீதையில், வியாசர், திருதராஷ்டிரர் பேசும் போது *த்ருதராஷ்ட்ர உவாச* என்கிறார்; அர்ஜுனன் பேசுகையில் *அர்ஜுன உவாச* என்கிறார்; ஸஞ்ஜயன் பேசுகையில் *ஸஞ்சய உவாச* என்கிறார். ஆனால் கிருஷ்ணர் பேசுகையில் *க்ருஷ்ண உவாச* என்பதற்குப் பதிலாக, *ஸ்ரீ பகவான் உவாச* என்று குறிப்பிட்டுள்ளார். பகவான் என்ற சொல்லின் பொருள் என்ன? பக என்றால் ''வைபவங்கள்'' என்றும், வான் என்றால் ''உடையவர்'' என்றும் பொருள்படுவதால், பகவான் என்றால் ''வைபவங்களை உடையவர்'' என்று பொருள். ஸ்ரீல பராசர முனி இதனை விஷ்ணு புராணத்தில் (6.5.47) மேலும் விளக்குகிறார்:


ஐஸ்வர்யஸ்ய ஸமக்ரஸ்ய
வீர்யஸ்ய யஷஸ: ஸ்ரீய:
க்ஞான-வைராக்யயோஷ் சைவ
ஸண்ணாம் பக இதிங்கன

பகவான், அல்லது முழுமுதற் கடவுள் என்பவர், செல்வம், புகழ், அறிவு, அழகு, பலம், துறவு ஆகிய ஆறு வைபவங்களையும் முழுமையாகப் பெற்றிருக்க வேண்டும்.

இப்பௌதிக உலகிலுள்ள சிலர், இந்த வைபவங்களில் ஏதேனும் ஒன்று அல்லது இரண்டினை, ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு, மற்ற மக்களைக் காட்டிலும் அதிகமாக கொண்டுள்ளதைக் காணலாம். உதாரணமாக, உலகிலேயே மிகப்பெரிய பணக்காரராக பில்கேட்ஸ் சில வருடங்கள் தொடர்ந்து இருந்தார்; ஆனால் தற்போது சார்லஸ் சிலிம் ஹேலு என்பவர் இருக்கின்றார். குத்துச்சண்டையில் தனக்கு நிகர் யாருமில்லை என்றும், தானே உலகின் பலசாலி என்றும் முகமது அலி மார்தட்டிக் கொண்டிருந்தார். ஆனால் தற்போது பார்கின்சன் என்னும் கொடிய நோயினால் பாதிக்கப்பட்டு சிறிய குவளையைக்கூட தூக்க சிரமப்படுகிறார்.

ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரிடத்தில் இந்த ஆறு வைபவங்களும் எப்பொழுதும் முழுமையாக உள்ளன. அவர் ஒரு வருட குழந்தையாக இருந்தபோது, தனது காலின் கட்டை விரலால் உதைத்து சகடாசுரன் என்னும் அசுரனை வதம் செய்தார்; தனது ஏழாவது வயதில் கோவர்தன மலையை இடது கை சுண்டு விரலில் ஏழு நாள்கள் இரவுபகலாக உயர்த்திப் பிடித்தார். பற்பல ஆண்டுகள் படித்தும் முழுமையாகப் புரிந்துகொள்ள இயலாத பகவத் கீதையை மிகவும் எளிதாக போர்க்களத்திலிருந்த அர்ஜுனனுக்கு உபதேசித்தார். அவர் என்றும் இளமை மாறாதவர் என்றும் அவருடைய அழகானது கோடி மன்மதர்களின் அழகை ஒன்று சேர்த்தாலும் ஒப்பிட முடியாதது என்றும் பிரம்ம சம்ஹிதையில் பிரம்ம தேவர் போற்றுகிறார். இவ்வளவு வளங்கள் நிரம்பப் பெற்றிருந்தும், சற்றும் செருக்கில்லாமல் தனது நண்பனான அர்ஜுனனின் தேரோட்டியாக மஹாபாரதப் போரில் அவர் செயல்பட்டார். இஃது அவரின் துறவை காட்டுகிறது.

எனவே, பகவான் என்னும் சொல், ஸ்ரீ கிருஷ்ணருக்கு மட்டுமே பொருந்தக்கூடியது; பிரம்மா, சிவன் உட்பட வேறு எந்த தேவர்களுக்கும் அல்ல. பிரம்மா, இந்திரன், சந்திரன் என்பனவெல்லாம் வெறும் பதவிகளே, தகுதி பெற்ற ஜீவன்கள் இப்பதவியை



அடைய முடியும். அவ்வப்போது காலத்தின் கோலத்தில், இந்திரன், சந்திரன், வருணன் போன்ற பதவிகளில் தகுதிபெற்ற ஜீவன்கள் நியமிக்கப்படுவார்கள். ஆனால் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் ஸ்தானமோ நிரந்தரமானது, தற்காலிகமானதல்ல.

ஸ்ரீ கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பது பகவத் கீதையில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. *அஹம் ஸர்வஸ்ய ப்ரபவோ மத்த: ஸர்வம் ப்ரவர்ததே,* "ஜட, ஆன்மீக உலகங்களின் மூலம் நானே, எல்லாம் என்னிடமிருந்தே தோன்றுகின்றன," (10.8) என்றும், "நானே எல்லா யாகங்களையும் தவங்களையும் இறுதியில் அனுபவிப்பவன், எல்லா லோகங்களையும் தேவர்களையும் கட்டுப்படுத்துபவன், எல்லா உயிர்வாழிகளின் உற்ற நண்பன்," (5.29) என்றும், "நானே எல்லா தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் மூலம்," (10.2) என்றும், "நூலில் எவ்வாறு முத்துக்கள் கோர்க்கப்பட்டுள்ளனவோ, அதுபோல உலகிலுள்ள அனைத்தும் என்னைச் சார்ந்தே உள்ளன," (7.7) என்றும் பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணர் தெளிவாகக் கூறுகிறார்.

ஸ்ரீமத் பாகவதத்தில், (1.3.28) பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே எல்லா அவதாரங்களின் மூலம் என்றும், அவரே ஸ்வயம் பகவான் என்றும், இதர அவதாரங்கள் அனைவரும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அம்சம், அல்லது அம்சத்தின் அம்சம் என்றும், கிருஷ்ணரே சாக்ஷாத் முழுமுதற் கடவுள் என்றும் ஸ்ரீல வியாஸதேவர் குறிப்பிடுகிறார்.

முதன்முதலில் படைக்கப்பட்ட உயிர்வாழியான பிரம்மதேவர் பிரம்ம சம்ஹிதையில் பின்வருமாறு கூறுகிறார்:

*ஈஷ்வர: பரம: க்ருஷ்ண: ஸச்-சித்-ஆனந்த விக்ரஹ:*
*அனாதிர் ஆதிர் கோவிந்த: ஸர்வ-காரண-காரணம்*

ஈஷ்வர என்றால் "கட்டுப்படுத்துபவர்" என்று பொருள். காற்றைக் கட்டுப்படுத்துபவர், மழையைக் கட்டுப்படுத்துபவர், ஒளியைக் கட்டுப்படுத்துபவர் என கட்டுப்படுத்துவோர் பலர் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரிலும் கிருஷ்ணரே உயர்ந்தவர் என்று பிரம்மதேவர் கூறுகிறார். அவர் மற்றெல்லா கட்டுப்பாட்டாளர்களையும் கட்டுப்படுத்துபவராக இருக்கிறார். ஸ்ரீபாத ஆதி சங்கராசாரியர் தனது கீதா மஹாத்மியத்தில், ஒருவரே கடவுள் என்றும், அது தேவகியின் புத்திரரான ஸ்ரீ கிருஷ்ணரே" என்றும் கூறுகிறார்.

இவ்வாறாக, எல்லா ரீதியிலும் சரி, பகவத்கீதையின் கூற்றின் படியும் சரி, பகவான் ஸ்ரீ கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது.

அடுத்த இதழில் முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணர், பிரம்மா, சிவன் போன்ற இதர தேவர்களிடமிருந்து எவ்வாறு வேறுபட்டவர் என்பதைக் காணலாம்.

*ஜெய கோபிநாத தாஸ் B.E அவர்கள், இஸ்கான் சென்னை கிளையில் முழு நேர பிரம்மச்சாரியாகத் தொண்டாற்றி வருகிறார்.*

# சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன. பிரதி மாதம் 12ஆம் தேதிக்குள் புத்தகம் தங்களை வந்து சேரவில்லையெனில், உடனடியாகத் தவறாமல் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளவும்.

சந்தா முடிவதற்கு முன்பு, அதனைப் புதுப்பித்து தங்களது ஆன்மீக வாழ்விற்கான இணையற்ற வழிகாட்டியினை தொடர்ந்து பெறும்படி கேட்டுக் கொள்கிறோம்.

# தலை வணங்குதல்

தெய்வத்திரு. அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதருக்கும் விருந்தினர் ஒருவருக்கும் இடையில் செப்டம்பர் 1968இல் சியாட்டலில் உள்ள பிரச்சாரக் கூடத்தில் நடைபெற்ற ஓர் உரையாடல்.

**விருந்தினர்:** கீழ்ப்படிதல் என்பதைப் பற்றி விளக்க முடியுமா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** கீழ்ப்படிதல்? அது மிகவும் எளிதானது. ஒவ்வொருவரும் மற்றொருவருக்கு கீழ்ப்படிந்துதான் இருக்க வேண்டும். நீங்கள் யாருக்கும் கீழ்ப்படிவதில்லையா?

**விருந்தினர்:** ஆம், பௌதிக விஷயத்தில் கீழ்ப்படிகின்றேன். ஆனால் ஆன்மீகத்தில் நான் என்னை யாருக்கும் கீழ்ப்படிந் தவனாக உணரவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆன்மீக வாழ்க்கை என்றால் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளும்போது, ஆன்மீக அறிவிலும் நீங்கள் கீழ்ப்படிந்தவன் என்பதை உணர்வீர்கள். ஏனெனில், கீழ்ப்படிதல் என்பது உங்களின் இயற்கையான குணம். ஆன்மீகம், பௌதிகம் என்பதற்கு நீங்கள் கூறும் பொருள் என்ன?

**விருந்தினர்:** உதாரணமாக, வேலை செய்யும் இடத்தில் நான் எனது மேலதிகாரிக்கு கீழ்ப்படிந்தவன். ஆனால் எனது நிஜ வாழ்க்கையில், எனது ஆன்மீக வாழ்க்கையில், மேலதிகாரிக்கோ மற்றவர் களுக்கோ என்னைக் கீழ்ப்படிந்தவனாக நான் நினைக்கவில்லை. வேறு விதமாகக் கூறினால், யாருக்கும் கீழ்ப்படிய வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. எவரும் எனக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றும் நான் எண்ணவில்லை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் ஏன் தலை வணங்க விரும்பவில்லை?

**விருந்தினர்:** ஏனெனில், நான் யாருக்கும் கடன்பட்டவனல்ல, யாரும் எனக்குக் கடன்பட்டவர்கள் அல்ல என்று நான் நினைக்கின்றேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இது ஒரு ஜட வியாதி. கீழ்ப்படியும்படி நாம் கட்டாயப்படுத்தப்படு கிறோம், ஆயினும் யாருக்கும் தலை வணங்க வேண்டியதில்லை என்று நாம் நினைக்கிறோம். இதுவே வியாதி.

**விருந்தினர்:** தலைவணங்கும்படி யாரும் என்னைக் கட்டாயப்படுத்த முடியாது.



**ஸ்ரீல பிரபுபாதர்:** நான் சொல்வதைப் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். நீங்கள் கீழ்ப்படிய விரும்பவில்லை என்று கூறுகிறீர்கள். சரியா?

**விருந்தினர்:** ஆம். அதுவே உண்மை.

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஏன்?

**விருந்தினர்:** ஏனெனில், நான் யாருக்கும் தாழ்ந்தவனல்ல என்று நான் நினைக்கின்றேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவே ஜட வாழ்விலுள்ள வியாதி. உங்களது வியாதியை நீங்களே ஆய்ந்துள்ளீர்கள். ஒவ்வொருவரும், "நான் தலைவனாக இருக்க விரும்புகிறேன், தலைவணங்க விரும்பவில்லை," என்று நினைக்கின்றனர். இஃது உங்களுடைய வியாதி மட்டுமல்ல, ஒவ்வொருவரும் மனதளவில் இந்த வியாதியால் பீடிக்கப்பட்டிருக்கின்றனர். "நான் ஏன் தலைவணங்க வேண்டும்? நான் ஏன் கீழ்ப்படிய வேண்டும்?" ஆனால் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று இயற்கை என்னைக் கட்டாயப்படுத்திக் கொண்டுள்ளது. இல்லையெனில், மக்கள் ஏன் மரணமடைகின்றனர்? இக்கேள்விக்கு உங்களால் பதிலளிக்க முடியுமா?

**விருந்தினர்:** மக்கள் ஏன் மரணமடைகிறார்கள் என்று கேட்கிறீர்களா?

**ஸ்ரீல பிரபுபாதர்:** ஆம், யாரும் மரணமடைய விரும்புவதில்லை, ஆயினும் ஒவ்வொருவரும் மரணமடைகின்றனர். ஏன்?

**விருந்தினர்:** மரணம் என்பது உயிரியல் ரீதியாக நிர்ணயிக்கப்படுகிறது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இதுவே உயிரியலின் வலிமை. நீங்கள் உயிரியலுக்குக் கீழ்ப்படிகிறீர்கள். சரியா? யாருக்கும் கீழ்ப்படிந்தவனல்ல என்று நீங்கள் ஏன் கூறுகிறீர்கள்?

**விருந்தினர்:** நான் அப்படிதான் நினைத்துக் கொண்டுள்ளேன்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** நீங்கள் தவறாக நினைத்துக் கொண்டுள்ளீர்கள். இதைத்தான் நான் எடுத்துரைக்க முயற்சி செய்கிறேன். நீங்கள் கீழ்ப்படிந்தவரே. நீங்கள் உயிரியலின் வலிமைக்குத் தலைவணங்கியாக வேண்டும். மரணம் வரும்போது, "ஓ, நான் உனக்கு பணிய மாட்டேன்" என்று சொல்ல முடியாது. நீங்கள் கீழ்ப்படிந்தவரே.

**விருந்தினர்:** நான் கடவுளுக்குக் கீழ்ப்படிந்தவன், ஆம்.

**ஸ்ரீல பிரபுபாதர்:** இல்லை. தற்போது கடவுளை மறந்து விடுங்கள். கடவுள் மிகத் தொலைவில் இருக்கிறார். இப்போது நாம் ஜட இயற்கையைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். நீங்கள் இறக்க விரும்பாவிட்டாலும், கீழ்ப்படிந்தவர் என்பதால் நீங்கள் இறப்பிற்குக் கட்டுப்பட்டவர்.

**விருந்தினர்:** ஆம், இது சிந்தனைக்குரியது.

**ஸ்ரீல பிரபுபாதர்:** எனவே, "நான் கீழ்ப்படிந்தவன்" என்பதை நீங்கள் புரிந்துகொள்ளுங்கள். "நான் கட்டுப்பாடற்றவன், கீழ்ப்படிந்தவனல்ல" என்று நீங்கள் பறைசாற்ற இயலாது. கீழ்ப்படிய விரும்பவில்லை என்றோ, தலைவணங்க வேண்டியதில்லை என்றோ நீங்கள் நினைத்துக் கொண்டிருந்தால், உங்களுக்கு வியாதி உள்ளது என்று பொருள்.

**விருந்தினர்:** சரி, ஆனால், யாருக்கு, எதற்காக நான் தலைவணங்க வேண்டும்?

**ஸ்ரீல பிரபுபாதர்:** முதலில் நீங்கள் உங்களது வியாதியை முழுமையாகப் புரிந்துகொள்ளுங்கள். பின்னர் அதற்குரிய மருந்தை நாங்கள் தருகிறோம். நீங்கள் மரணத்திற்குத் தலைவணங்குகிறீர்கள், மேலும் பல்வேறு இதர விஷயங்களுக்கும் தலைவணங்குகிறீர்கள். தலைவணங்கும்படி நீங்கள் கட்டாயப் படுத்தப்படுகிறீர்கள். இருப்பினும், "நான் தலைவணங்க முடியாது, தலைவணங்க விரும்பவில்லை" என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள். ஆனால் நீங்கள் தலைவணங்கித்தான் ஆக வேண்டும். உங்களுடைய நிலையை நீங்கள் மறந்துவிடுவது ஏன்? அந்த மறதியே உங்களது வியாதி.

நீங்கள் தலைவணங்கித்தான் ஆக வேண்டும் என்னும் பட்சத்தில், கீழ்ப்படிந்த நிலையிலும் எப்படி மகிழ்ச்சியுடன் இருக்க முடியும் என்பதைக் கண்டறிய வேண்டியது உங்களின் அடுத்த படியாகும். அதுவே, கிருஷ்ணரிடம் தலைவணங்குதல். கீழ்ப்படிவதை உங்களால் தடுக்க முடியாது, நீங்கள் அதற்காகவே படைக்கப்பட்டுள்ளீர்கள். எனவே, கிருஷ்ணருக்கும் அவரது பிரதிநிதிக்கும் தலைவணங்கினால், நீங்கள் மகிழ்ச்சியடைவீர்கள். இதுவே வேறுபாடு, கிருஷ்ணருக்கும் அவரது பிரதிநிதிக்கும் தலைவணங்காவிட்டால், நீங்கள் வேறு எதற்காவது தலைவணங்கக் கட்டாயப்படுத்தப்படுவீர்கள், மாயைக்கு தலைவணங்க வேண்டிவரும். இதுவே உங்களது நிலை, கண நேரம்கூட நீங்கள் சுதந்திரமாக இருக்க முடியாது.

ஆனால், கிருஷ்ணருக்கும் அவரது பிரதிநிதிக்கும் தலைவணங்கினால் நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். உதாரணமாக, ஒரு குழந்தை தனது பெற்றோருக்கு எப்போதும் கீழ்ப்படிந்துள்ளது; அதனால் அது மகிழ்ச்சியுடன் இருக்கிறது. "எனதன்பு குழந்தையே, இங்கு வந்து அமர்வாயாக," என்று தாய் கூற, "சரி," என்று குழந்தையும் கூறுகிறது, மகிழ்ச்சியடைகிறது. இது குழந்தைக்கும் தாய்க்கும் இடையிலுள்ள இயல்பான உறவுமுறை. கிருஷ்ணரும் அவரது பிரதிநிதியும் அன்பான தாய் தந்தையரைப் போன்றவர்கள், நாம் மாயையில் சிக்கியுள்ள ஆதரவற்ற குழந்தைகளைப் போன்றவர்கள். இருப்பினும், அவர்களுக்குத் தலைவணங்கினால், நாம் பாதுகாப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருக்க முடியும்.

எனவே, தலைவணங்குவதை உங்களால் நிறுத்த முடியாது, அஃது இயலாதது. ஆனால் தலைவணங்குவதற்குத் தகுதியான நபர்களை நீங்கள் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். "நான் யாருக்கும் தலைவணங்கப் போவதில்லை, சுதந்திரமானவன்" என்று நீங்கள் செயற்கையாக நினைத்தால், நிச்சயம் துன்பப்படுவீர்கள். சரியான நபரிடம், கிருஷ்ணர் அல்லது அவரது பிரதிநிதியிடம் நீங்கள் தலைவணங்க வேண்டும்.

(தமிழாக்கம்: இராம கிங்கர தாஸ்)

# தீவிரவாதச் செயல்கள்

## ஓர் ஆன்மீகப் பார்வை

தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி



இவ்வுலகம், பல்வேறு பிரச்சனைகளைக் கொண்ட மோசமான இடம். அப்பிரச்சனைகளுடன் இணைந்து தற்போதைய நவீன வாழ்வில் உருவெடுத்திருக்கும் மற்றுமொரு பிரச்சனை, தீவிரவாதம். உலகில் எங்கு வேண்டுமானாலும் எப்போது வேண்டுமானாலும் அசம்பாவிதங்கள் நிகழலாம்; தெருவில் சாதாரணமாக நடந்து செல்லும்போது, திடீரென்று குண்டு வெடித்து நாம் மரணத்தைத் தழுவலாம், அல்லது கை கால்களை இழக்கலாம். இந்த அச்சம் தற்போது எல்லோரின் மனதிலும் உள்ளது. உலகில் எங்குச் சென்றாலும், தீவிரவாதத்தின் இறுக்கத்தை உணர்கிறோம்.

### காரணம் என்ன?

இதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன. ஒரு செயலுக்குப் பல காரணங்கள் இருப்பதை வேத வழிமுறையைப் பின்பற்றுவோர் அறிவர். உதாரணமாக, ஒரு மண் பானைக்கான காரணம் என்ன? களிமண்ணும் சக்கரமும் அதற்கான காரணங்கள். ஆனால் மூல காரணம் குயவனே. களிமண்ணும் சக்கரமும் இருக்கலாம், ஆனால் குயவன் அதனை வடிக்காவிடில், பானை நமக்குக் கிட்டாது. மேலும், பானைக்கான காரணம் மக்களே என்றும் கூறலாம், மக்கள்தானே பானையை வாங்குகிறார்கள். மக்கள் ஏன் பானையை வாங்குகிறார்கள் என்று அடுத்ததாகக் கேட்கலாம். தண்ணீர் பிடிப்பதற்காக என்பது பதில். ஏன் தண்ணீர் பிடிக்க வேண்டும்? இப்படியே கேட்டுக் கொண்டே சென்றால், இறுதியில் கிருஷ்ணரைக் காண்பீர்கள். அவர் *ஸர்வ காரண காரணம்*, எல்லா காரணங்களுக்கும் காரணமானவர்.

தீவிரவாதத்திற்கான காரணம் என்ன? குண்டுகளைத் தயாரிக்க உதவும் நவீன தொழில்நுட்பம், நவீன காலத்தின் நகர வாழ்க்கை என இதற்குப் பல காரணங்களைக் கூறலாம். நாட்டில் மக்கள் பரவலாக வாழ்ந்தால், குண்டு வைத்து பல பேரைக் கொல்வது சாத்தியமல்ல; மாறாக, மக்கள் (மும்பையைப் போன்று) நெருக்கமாக வாழ்ந்தால், குண்டு வெடிக்கும்போது நிறைய பேர் கொல்லப்படுகின்றனர், காயமடைகின்றனர். எனவே, நவீன வாழ்வின் ஜன நெருக்கமும் தீவிரவாதத்திற்கான ஒரு காரணமாக அமைகிறது. வெறுப்பு, வெறித்தனம் போன்றவையும் இதர காரணங்களாக அமைகின்றன.

மதவெறி என்பது தீவிரவாதத்திற்கான காரணம் என்று தற்போது பரவலாகப் பேசப்படுகிறது. மதவெறி மட்டுமின்றி, பல்வேறு அரசியல் வெறிகளையும் இவ்வுலகம் கண்டுள்ளது. அரேபியர்களுக்கும் இஸ்ரேலியர்களுக்கும் இடையிலான சண்டைகள், இனவெறி யினால் எழுந்த தீவிரவாதச் செயல்கள், ஜெர்மனியர்களின் விசித்திரமான நம்பிக்கையால் எழுந்த சண்டைகள் என்று பல்வேறு உதாரணங்களைக் கொடுக்கலாம்.

சில நேரங்களில், தீவிரவாதிகளின் போராட்டத்திற்குப் பின்னால்கூட, ஏற்றுக் கொள்ளத்தக்க காரணங்கள் இருப்பதாக கூறப்படுவதுண்டு. உதாரணமாக, இரயில்களைத் தகர்த்து, ஜவான்களைக் கொல்லும் மாவோயிஸ்டுகளுக்குப் பின்னால் உண்மையான மனக்குறைகள் இருப்பதாக சிலர் கூறுகின்றனர். அரசுகள்,

குடிமக்களை ஓட்டுக்காக மட்டுமே பார்க்கின்றனர், நிலத்தை அபகரித்து அவர்களை பலவந்தமாக வெளியேற்றுகின்றனர்; அப்போது மக்கள் என்ன செய்வார்கள்? அவர்கள் ஆயுதம் ஏந்துவதில் ஆச்சரியம் ஏதுமில்லை. ஆச்சரியம் இல்லை என்று சொல்வதால், அதை நியாயப்படுத்துகிறேன் என்று அர்த்தமில்லை, காரணங்களை எடுத்துரைக்கின்றேன்.

## தினசரி வாழ்க்கை

தீவிரவாதம் நவீன வாழ்வின் ஓர் அன்றாட அங்கமாகிவிட்டது. சுவாமி நாராயணன் கோவிலில் நடந்த தாக்குதல், கோத்ரா ரயில் எரிப்பு, அதைத் தொடர்ந்த கலவரங்கள், பாபர் மசூதி இடிப்பினால் எழுந்த கலவரங்கள், மும்பையில் அடுத்தடுத்து நடக்கும் தாக்குதல்கள் என பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது. அடிக்கடி தீவிரவாதச் செயல்கள் நடைபெறக்கூடிய நாடுகளில் இந்தியாவும் ஒன்றாகிவிட்டது. வங்காளதேசம், பாகிஸ்தான் போன்ற நாடுகளில் எத்தனையோ தீவிரவாதச் செயல்கள் நடைபெறுகின்றன. ஆஸ்திரேலியாவில்கூட சில வருடங்களுக்கு முன்பு தூதரகம் ஒன்று குண்டு வைத்து தகர்க்கப்பட்டது, அமெரிக்காவில் நடந்த 9/11 தாக்குதல் அனைவரும் அறிந்ததே; மேலும், பிரிட்டன், ரஷ்யா என எல்லா நாடுகளிலும் இதைக் காண்கிறோம். தாக்குதல் நடக்காத இடமே இல்லை என்று கூறலாம்.

## நாடுகளே அரங்கேற்றும் தீவிரவாதம்

தீவிரவாதம் மோசமானது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இருப்பினும், அந்த தீவிரவாதத்தை ஒரு நாடே முன்னின்று அரங்கேற்றும்போது, அத்தகு தீவிரவாதம் மற்றெல்லாவற்றையும்விட மிகவும் மோசமானது என்று அமெரிக்கா கருதுகிறது. அதன்படி, பாகிஸ்தான் தீவிரவாதத்தைத் தூண்டுகின்றது என்று இந்தியாவும், ஈரான் தீவிரவாதத்தைத் தூண்டுகின்றது என்று அமெரிக்காவும் தொடர்ந்து குற்றம் சாட்டி வருவதைப் பார்க்கிறோம். தீவிரவாதம் என்று சொல்லும்போது, நம் மனதில் வருவது மனிதர்களைக் கொல்வது மட்டுமே. மனிதர்களைக் கொல்வது தீவிரவாதமே, ஆனால் கோடிக்கணக்கான மிருகங்களும் பறவைகளும் தினமும் கசாப்புக் கூடங்களில் கொல்லப்படுகின்றனவே, அவற்றிற்கு என்ன பதில்? அதுவும் தீவிரவாதச் செயலாகவே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்.

உலகிலுள்ள பெரும்பாலான நாடுகளில், உண்மையில் எல்லா நாடுகளிலும், குறிப்பாக வளர்ச்சி பெற்ற நாடுகளில், அந்த நாட்டினரே அரங்கேற்றும் இந்த தீவிரவாதச் செயல் நடைபெற்று வருகிறது. முன்னேறிய நாடுகளில் முன்னேற்றம் வாய்ந்த இயந்திரங்கள் மற்றும் வழிமுறைகளின் மூலம் மிருகங்களும் பறவைகளும் அடைத்து வைக்கப்பட்டு கொடூரமான முறையில் கொல்லப்படுகின்றன; இஃது ஒரு பெரிய தொழிலாக நடைபெற்று வருகிறது. இதுவும் தீவிரவாதச் செயல்தானே?

மிருகங்கள் ஏன் கொல்லப்பட வேண்டும்? உணவிற்காக மிருகங்களைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை. மாமிசம் இல்லாமலேயே நீங்கள் ஆரோக்கியமாகவும் பலமாகவும் வாழ முடியும். மிருகங்களுக்கு வலியைக் கொடுத்து, அவற்றைக் கொலை செய்வதற்காக கசாப்புக் கூடங்களை நடத்துவது என்பது ஒரு தீவிரவாதச் செயலே.

**உணவிற்காக மிருகங்களைக் கொல்ல வேண்டிய அவசியமில்லை. மாமிசம் இல்லாமலேயே நீங்கள் ஆரோக்கியமாகவும் பலமாகவும் வாழ முடியும். மிருகங்களுக்கு வலியைக் கொடுத்து, அவற்றைக் கொலை செய்வதற்காக கசாப்புக் கூடங்களை நடத்துவது என்பது ஒரு தீவிரவாதச் செயலே.**

## தீவிரவாதத்தை ஒழிக்க முடியாது

மிருகங்களின் மீது இவ்வளவு துன்பத்தைத் திணிக்கும்போது, மக்களின் மீதான தீவிரவாதச் செயல்களையும் போர்களையும் தவிர்த்தல் என்பது சாத்தியமில்லாத ஒன்று. வியட்நாமில் போர் நிகழ்ந்தபோது, மிருகங்கள் கட்டுப்பாடின்றி கொல்லப்படுவதால் போர் நடப்பது நிச்சயமே என்று ஸ்ரீல பிரபுபாதர் கூறினார். மேலும், போர் நடைபெறும்போது, போரிலிருந்து காப்பாற்றும்படி இறைவனிடம் பிரார்த்தனை செய்யாதீர்கள் என்றும் அவர் கூறினார். உங்களுடைய பாவ காரியங்களினால் நீங்களே போரை உண்டாக்கினீர்கள். ஆனால் இப்போது போரிலிருந்து காப்பாற்றும்படி இறைவனிடம் வேண்டுவது என்பது கபடத்தனம், மூடத்தனம்.

தீவிரவாதிகளின் குண்டுகள் எங்காவது வெடிக்கும்போது, உடனடியாக பல்வேறு நாட்டின் தலைவர்கள் அதற்குக் கண்டனம் தெரிவிக்கின்றனர். ஆனால் இவையனைத்தும் வெறும் கபடத்தனமே. கோடிக்கணக்கான மிருகங்களைக் கொடூரமாகக் கொல்வதற்கு தங்களுக்கு உரிமை இருப்பதாக நினைக்கும் அவர்கள், சில மனிதர்கள் கொடூரமாகக் கொல்லப்படும்போது கண்டனம் தெரிவிப்பது கபடத்தனம் இல்லையா? இத்தலைவர்கள் அவ்வப்போது அமைதிப் பேச்சுவார்த்தைகளை நடத்துவதுண்டு; ஆனால் அப்பேச்சுவார்த்தையின் இறுதியில் இந்த அயோக்கியர்கள் மாமிசம் சாப்பிடுவதும் வழக்கம். இது கபடத்தனம் இல்லையா? ஏமாற்றுவதில்லையா?

எனவே, தீவிரவாதத்தை உங்களால் ஒழிக்க முடியாது. உங்களைக் காட்டிலும் ஒருபடி முன்னேறியவன் எப்போதும் இருப்பான். நீங்கள் கைரேகையை எடுக்கலாம், கைபேசிகளை சோதனையிடலாம், என்ன வேண்டுமானாலும் செய்யலாம். ஆனால் உங்களைவிட அவர்கள் புத்திசாலியாக இருப்பார்கள். நீங்கள் விரும்பாத மோசமான செயல்களைச் செய்வதற்கு

அவர்கள் ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிப்பர். எனவே, இதற்கான தீர்வு உங்களிடம் இல்லை என்பதே உண்மை.

## கீழ்த்தரமான உணர்வு

தீவிரவாதத்திற்கான தீர்வினை எங்களால் (அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தால்) வழங்க முடியும். எல்லா பிரச்சனைகளுக்கும் மூல காரணம், கிருஷ்ணருடனான நமது உறவை நாம் மறந்திருப்பதே. அந்த மறதியினால் பல்வேறு ஆசைகள் தோன்றுகின்றன, அவை ரஜோ குணத்தையும் தமோ குணத்தையும் நோக்கி நம்மை அழைத்துச் செல்கின்றன. மாமிசம் உண்பது என்பது தமோ குணத்தின் செயலாகும். கசாப்புக் கூடங்களை வைத்து மிருகங்களைக் கொலை செய்வதால், கர்ம வினைகளைப் பெறுவது மட்டுமின்றி, மக்களின் உணர்வும் கொடூரமாகின்றது. மக்களின் உணர்வை தமோ குணத்திற்கு அழைத்துச் செல்லும் மாமிச உணவுகள், தகாத செயல்களைச் செய்வதற்கு அவர்களைத் தூண்டுகின்றன.

அதுமட்டுமின்றி, தொலைக்காட்சியிலும் வீடியோ விளையாட்டுகளிலும் எப்போது பார்த்தாலும், கொலை, கொலை, கொலை என்று இருக்கும்போது, அதைப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? கொலை செய்வது இயல்பானது என்று நினைத்து வன்முறையில் ஈடுபடத் தொடங்குவர்.

எனவே, வாழ்க்கை குறித்த இந்த விஞ்ஞானத்தை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும், உலகம் எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். இல்லாவிடில், வாழ்வின் பிரச்சனைகளுக்கு முடிவே இல்லை. இவ்வுலகின் விதிகளை நாம் தெரிந்துகொண்டு, அதன்படி வாழ வேண்டும்; அவற்றை நாம்


**தொலைக்காட்சியிலும் வீடியோ விளையாட்டுகளிலும் எப்போது பார்த்தாலும், கொலை, கொலை, கொலை என்று இருக்கும்போது, அதைப் பார்ப்பவர்கள் என்ன நினைப்பார்கள்? கொலை செய்வது இயல்பானது என்று நினைத்து வன்முறையில் ஈடுபடத் தொடங்குவர்.**

மீறும்போது, இயற்கையின் சட்டத்தினால் தண்டிக்கப்படுவோம். போர்கள், எய்ட்ஸ் போன்ற வியாதிகள், மனோவியாதிகள் (இன்றைய உலகின் முக்கியமான நோய்), தீவிரவாதச் செயல்கள் என இவையாவும் பாவகரமான உணர்வின் விளைவுகளே.

பாவத்தை ஒழித்து, இயற்கையின் விஞ்ஞானத்திற்கு ஏற்ப வாழ வேண்டும். இதுவே தர்மம் எனப்படுகிறது. இது மதவெறியோ மனவெழுச்சியோ அல்ல. உலகிலுள்ள பெரும்பாலான மதத்தினர் மாமிசம் உண்பதை அனுமதித்து, வசதி செய்து தருகின்றனர். கடவுளின் பெயரால், கடவுளின் விருப்பத்திற்கு எதிராக அவர்கள் செயல்படுகிறார்கள். நாம் தர்மத்தின் விதிகளுக்கு ஏற்ப செயல்படுதல் அவசியம்.

நாம் நமது உணர்வைத் தூய்மைப்படுத்த வேண்டும். ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று கிருஷ்ணரின் திருநாமங்களை உச்சரிப்பதே அத்தூய்மையை அடைவதற்கான மிகச்சிறந்த வழியாகும். ஆனால் பெரும்பாலான மக்கள் இதை விரும்புவதில்லை. மக்கள் இறைவனின் ஆட்சியை விரும்புகின்றனர், ஆனால் இறைவனை விரும்புவதில்லை என்று ஸ்ரீல பிரபுபாதர் அடிக்கடி கூறுவார். அவர்கள் அமைதியை விரும்புகின்றனர்; அந்த அமைதி எதற்காக? அமைதியான முறையில் மிருகங்களைக் கொல்வதற்காகவும் தகாத பாலுறவில் ஈடுபடுவதற்காகவுமே. மிருகங்களை நாம் வதைக்கும் போது, எங்கிருந்து அமைதி கிட்டும்? மிருகங்களையும் அமைதியாக வாழவிட வேண்டும் என்பதைப் புரிந்துகொள்ளுதல் அவசியம்.

(தமிழாக்கம்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்)



அமைதியாக வாழ விரும்பும் மக்கள், இவர்களையும் அமைதியாக வாழ விடலாமே!

# ஸ்ரீ தசாவதார ஸ்தோத்ரம்

## ஜெய தேவ கோஸ்வாமியின் கீத கோவிந்தத்திலிருந்து

ப்ரளய-பயோதி$_4$-ஜலே த்$_4$ருதவான் அஸி வேத$_3$ம்
விஹித-வஹித்ர-சரித்ரம் அகே$_2$த$_3$ம்
கேஷ$_2$வ த்$_4$ருத-மீன-ஷரீர ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! மீனின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! பிரளயத்தின் பெருங்கடலில் மூழ்கியிருந்த வேதங்களைக் காப்பதற்காக, மாபெரும் மீனின் உருவில் தோன்றி படகு போன்று எளிதாகச் செயல்பட்டீர்கள். (1)

க்ஷிதிர் இஹ விபுலதரே திஷ்ட$_2$தி தவ ப்ருஷ்டே$_2$
த$_4$ரணி-தா$_4$ரண-கிண-சக்ர-க$_3$ரிஷ்டே$_2$
கேஷ$_2$வ த்$_4$ருத-கூர்ம-ஷரீர ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! ஆமையின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! பாற்கடலைக் கடைவதற்கு உதவி செய்வதற்காக ஏற்ற இந்த அவதாரத்தில், பிரம்மாண்டமான உமது முதுகை ஓர் அச்சு போல பயன்படுத்தி, மந்தார மலையைத் தாங்கி நிற்கிறீர்கள். மாபெரும் மலையைச் சுமந்ததால் உமது முதுகில் ஏற்பட்ட பெரிய வடுவானது மிகுந்த புகழைப் பெற்றது. (2)

வஸதி தஷன-ஷிக$_2$ரே த$_4$ரணீ தவ லக்னா
ஷஷினி கலங்க-கலேவ நிமக்னா
கேஷ$_2$வ த்$_4$ருத-ஷௌகர-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! காட்டுப்பன்றியின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! பிரபஞ்சத்திற்கு அடியில் கர்போதக கடலில் மூழ்கியிருந்த பூமியானது, சந்திரனில் இருக்கும் புள்ளியைப் போன்று உம்முடைய மூக்கின் நுனியில் அமர்ந்துள்ளாள். (3)

தவ கர-கமல-வரே நக$_2$ம் அத்$_3$பு$_4$த-ஷ்ருங்க$_3$ம்
தலித-ஹிரண்யகஷி$_2$பு-தனு-ப்$_4$ருங்க$_3$ம்
கேஷ$_2$வ த்$_4$ருத-நரஹரி-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! பாதி மனிதனாகவும் பாதி சிங்கமாகவும் தோன்றிய பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! சிறு பூச்சியை விரல் நகங்களுக்கிடையே வைத்து சுலபமாக நசுக்குவதுபோல, சக்தி வாய்ந்த அசுரன் ஹிரண்யகசிபுவின் உடல் உமது தாமரைக் கரங்களின் அற்புதமான கூரிய நகங்களால் கிழித்தெறியப்பட்டது. (4)

ச$_2$லயஸி விக்ரமணே ப$_3$லிம் அத்$_3$பு$_4$த-வாமன
பத$_3$-நக$_2$-நீர-ஜனித-ஜன-பாவன
கேஷ$_2$வ த்$_4$ருத-வாமன-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! குள்ளமான பிராமணரின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே. அற்புதமான வாமனரே, தங்களது திருப்பாதங்களால் மாபெரும் அடியை அளந்து, பலி சக்ரவர்த்தியை ஏமாற்றினீர்கள். உங்களுடைய பாதத்தின் விரல் நுனியிலிருந்து கங்கையை வெளிக்கொணர்ந்து, உலகிலுள்ள அனைத்து ஜீவன்களையும் விடுவிக்கிறீர்கள். (5)

க்ஷத்ரிய-ருதி$_4$ர-மயே ஜக$_3$த்$_3$-அபக$_3$த-பாபம்
ஸ்னபயஸி பயஸி ஷ$_2$மித-ப$_4$வ-தாபம்
கேஷ$_2$வ த்$_4$ருத-ப்$_4$ருகு$_3$பதி-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! பரசுராமரின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! உம்மால் கொல்லப்பட்ட அசுர அரசர்களின் உடலிலிருந்து வந்த ரத்த ஆற்றில் இந்த பூமியை குருட்சேத்திரத்தில் கழுவுகிறீர்கள். உலகத்தின் பாவங்கள் உம்மால் கழுவப்பட்டு, பௌதிக வாழ்க்கை என்னும் எரியும் நெருப்பிலிருந்து மக்கள் விடுபட்டுள்ளார்கள். (6)



விதரஸி தி$_3$க்ஷு ரணே தி$_3$க்-பதி-கமனீயம்
த$_3$ஷ-முக$_2$-மௌலி-ப$_3$லிம் ரமணீயம்
கேஷ$_2$வ த்$_4$ருத-ராம-ஷரீர ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! ஸ்ரீ இராமச்சந்திரரின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! இலங்கைப் போரில் பத்து தலை கொண்ட அசுரனான இராவணனைக் கொன்று, அவனுடைய தலைகளை இந்திரன் தலைமையிலான பத்து திசைகளை நிர்வகிக்கும் தேவர்களுக்கு கொடுத்தீர்கள்; அந்த அரக்கனால் துன்புறுத்தப்பட்ட அவர்கள், இதற்காக நீண்ட காலம் காத்திருந்தனர். (7)

வஹஸி வபுஷி விஸதே வஸனம் ஜலதா$_3$ப$_4$ம்
ஹல-ஹதி-பீ$_4$தி-மிலித-யமுனாப$_4$ம்
கேஷ$_2$வ த்$_4$ருத-ஹலத$_4$ர-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! கலப்பையை கையாளும் பலராம உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! தங்களது பளபளப்பான வெண்ணிற உடலில், புதிய மழை மேகத்தின் நீல நிறத்தில் ஜொலிக்கும் ஆடைகளை அணிந்திருக்கிறீர்கள். தங்களது கலப்பையின் தாக்குதலால் மிகுந்த அச்சத்தை உணரும் யமுனையின் அழகான அடர்ந்த நிறத்தில் உமது அந்த ஆடைகள் உள்ளன. (8)

நிந்த$_3$ஷி யக்ஞ-விதே$_3$ர் அஹஹ ஷ்$_2$ருதி-ஜாதம்
ஸத$_3$ய-ஹ்ருத$_3$ய த$_3$ர்ஷி$_2$த-பஷு$_2$-கா$_4$தம்
கேஷ$_2$வ த்$_4$ருத-பு$_3$த்$_3$த$_4$-ஷரீர ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! புத்தரின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! கருணையுள்ளம் கொண்ட புத்தரே, வேத யாகங்களில் நடைபெற்ற மிருக பலியை தாங்கள் தடுத்துவிட்டீர்கள். (9)

ம்லேச்ச$_2$-நிவஹ-நித$_4$னே கலயஸி கரவாலம்
தூமகேதும் இவ கிம் அபி கராலம்
கேஷ$_2$வ த்$_4$ருத-கல்கி-ஷரீர ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! கல்கியின் உருவத்தை எடுத்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! அச்சமூட்டும் வால் நட்சத்திரம் போன்ற வாளை ஏந்தி, கலி யுகத்தின் இறுதியில், துர்நடத்தையுள்ள காட்டுமிராண்டித்தனமான மனிதர்களுக்கு தாங்கள் அழிவை ஏற்படுத்துகிறீர். (10)

ஸ்ரீ-ஜயதே$_3$வ-கவேர் இத$_3$ம் உதி$_3$தம் உதா$_3$ரம்
ஷ்$_2$ருணு ஸுக-த$_3$ம் ஷு$_2$ப$_4$-த$_3$ம் ப$_4$வ-ஸாரம்
கேஷ$_2$வ த்$_4$ருத-த$_3$ஷ$_2$-வித$_4$-ரூப ஜய ஜக$_3$தீ$_3$ஷ$_2$ ஹரே

ஓ கேசவ! பிரபஞ்சத்தின் பிரபுவே! பத்து விதமான உருவத்தில் அவதரித்த பகவான் ஹரியே, எல்லாப் புகழும் உமக்கே! வாசகர்களே, புலவர் ஜெயதேவ கோஸ்வாமியின் இப்பாடலை எல்லோரும் கேளுங்கள். இது மிகவும் உயர்ந்தது, கேட்பவருக்கு மகிழ்ச்சியையும் மங்களத்தையும் அளிக்கக்கூடியது, இருண்ட உலகத்திற்கு மிகச்சிறந்த ஒன்று. (11)

வேதா$_3$ன் உத்$_3$த$_4$ரதே ஜக$_3$ந்தி வஹதே பூ$_4$-கோ$_3$ளம் உத்$_3$பி$_3$ப்$_4$ரதே
தை$_3$த்யம் தா$_3$ரயதே ப$_3$லிம் ச$_2$லயதே க்ஷத்ர-க்ஷயம் குர்வதே
பௌலஸ்த்யம் ஜயதே ஹலம் கலயதே காருண்யம் ஆதன்வதே
ம்லேச்சா$_2$ன் மூர்ச$_2$யதே த$_3$ஷா$_2$க்ருதி-க்ருதே க்ருஷ்ணாய
துப்$_4$யம் நம:

பத்து அவதாரத்தில் தோன்றும் பகவான் கிருஷ்ணரே, உமக்கு எனது பணிவான வணக்கங்கள். மச்ச அவதாரத்தில் வேதங்களைக் காப்பாற்றுகின்றீர், கூர்ம அவதாரத்தில் முதுகில் மந்தார மலையை தாங்குகின்றீர், வராக அவதாரத்தில் கர்பக் கடலிலிருந்து பூமியை உயர்த்துகின்றீர், நரசிம்ம அவதாரத்தில் ஹிரண்யகசிபுவின் மார்பைக் கிழித்தெறிகின்றீர், வாமன அவதாரத்தில் பலி சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் கேட்டு மிகப்பெரிய உருவமாக மாறி முழு உலகையும் அளக்கின்றீர், பரசுராமராகத் தோன்றி தீய அரசர்களை கொன்று குவிக்கின்றீர், இராமராகத் தோன்றி இராவணனை வெல்கின்றீர், பலராம அவதாரத்தில் உங்களை நோக்கி யமுனையை வரவழைக் கின்றீர், புத்த அவதாரத்தில் துன்பப்படும் அனைத்து உயிரினங் களுக்கும் கருணை காட்டுகின்றீர், கலி யுக முடிவில் மிலேச்சர் களை அழிப்பதற்காக கல்கியாக அவதரிக்கின்றீர். (12)

# ஸ்ரீல பிரபுபாதரின் மேஜிக்



ஆகஸ்ட் 23, ஸ்ரீல பிரபுபாதர் தோன்றிய நாள்

**நிருபர்:** இந்த கிருஷ்ண பக்தி இயக்கத்தை அமெரிக்காவில் நீங்கள் எவ்வாறு ஸ்தாபிக்க முடிந்தது என்பதைச் சற்று கூற முடியுமா?

**பிரபுபாதர்:** நான் எனது ஆன்மீக குருவினால் இத்திருப்பணியைச் செய்யும்படி கட்டளையிடப்பட்டேன். அவரது கட்டளையின்படி, 1965இல் நான் இங்கு வந்தேன். நான் தனியாக வந்தேன், உதவிக்கு யாரும் கிடையாது, பணம் கிடையாது, எதுவும் கிடையாது.


**நிருபர்:** நீங்கள் மக்களை எவ்வாறு கவர்ந்தீர்கள்?

**பிரபுபாதர்:** நான் கீர்த்தனத்தை வைத்துதான் கவர்ந்தேன்.

**நிருபர்:** தெருக்களில் நின்று நீங்கள் கீர்த்தனம் செய்தீர்களா?

**பிரபுபாதர்:** ஆம். என்னிடம் எந்த மேஜிக்கும் கிடையாது. நான் ஒருபோதும் மேஜிக் காட்டியதில்லை; கீர்த்தனமே எனது மேஜிக்.

(நியூஸ்டே என்ற பத்திரிகை நிருபருடனான சந்திப்பு, ஜூலை 14, 1976, நியூயார்க்)




# பகவத் கீதை உண்மையுருவில் —ஒரு கண்ணோட்டம்

**அத்தியாயம் எட்டு**




தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய "பகவத் கீதை உண்மையுருவில்," 56 மொழிகளில், சுமார் 7 கோடி பிரதிகளாக உலக மக்களின் கரங்களில் பவனி வந்துள்ளது. உலகெங்கிலும் ஆயிரக்கணக்கான பக்தர்களை உருவாக்கிய தனிச்சிறப்பினை **பகவத் கீதை உண்மையுருவில்** பெற்றுள்ளது. ஸ்ரீல பிரபுபாதரால் அருளப்பட்ட அப்புத்தகத்தினை அனைவரும் நன்கு படித்துப் பயன்பெற உதவும் ஒரு சிறு முயற்சியே இந்தக் கண்ணோட்டம்.

இந்த நீண்ட கண்ணோட்டத்தின் பூரண பலனை அனுபவிக்க வேண்டுமெனில், ஸ்ரீல பிரபுபாதரின் பகவத் கீதையை இத்துடன் இணைத்து கவனமாக படிக்க வேண்டியது மிகவும் அவசியம். **பகவத் கீதை உண்மையுருவில்** நூலிற்காக ஸ்ரீல பிரபுபாதர் வழங்கிய அறிமுகத்தினையும் முதல் ஏழு அத்தியாயங்களையும் சென்ற இதழ்களில் கண்டோம். இந்த இதழில் **எட்டாம் அத்தியாயத்தையும்** இனிவரும் இதழ்களில் இதர அத்தியாயங்களையும் காணலாம்.

# பரத்தை அடைதல்

## ஏழாம் அத்தியாயத்தின் சுருக்கம்

கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதால் அவரைப் பற்றி அறிந்துகொள்ள முடியும்; கிருஷ்ணரை அறிந்தவர் மேலும் அறிவதற்கு ஒன்றும் இல்லை. நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், மனம், புத்தி, அஹங்காரம் ஆகிய எட்டு பௌதிகப் படைப்புகளும் கிருஷ்ணரின் சக்திகளே, இவற்றைக் காட்டிலும் உயர்ந்த ஜீவனும் அவரது சக்தியே. கிருஷ்ணரே எல்லாவற்றிற்கும் மூலம், அவரைவிட உயர்ந்த உண்மை வேறெதுவும் இல்லை. அனைத்திலும் அவரே முக்கிய அம்சமாக உள்ளார். அவரது தெய்வீக சக்தியான மாயையை வெல்வது மிகவும் அரிது, ஆனால் அவரிடம் சரணடைவோர் அதனை எளிதில் கடக்கலாம். இருப்பினும், நான்கு வித மக்கள் அவரிடம் சரணடைவதில்லை. அவரிடம் சரணடையும் நான்கு வித நல்லோரில் ஞானியே மிகச் சிறந்தவன். ஆனால் போதிய அறிவற்ற மக்களோ, பௌதிக ஆசைகளில் மயங்கி தேவர்களிடம் சரணடைகின்றனர். அவர்களுக்கான பலன்களை கிருஷ்ணரே வழங்குகிறார் என்றபோதிலும், அவை தற்காலிகமானவை. கிருஷ்ணரின் உருவத்தை மறுத்து, பரம்பொருள் அருவமானது என்று கருதுவோர், தேவர்களை வழிபடுபவர்களைக் காட்டிலும் முட்டாள்கள். அனைத்தையும் அறிந்த கிருஷ்ணரை யாராலும் முழுமையாக அறிய முடியாது. கிருஷ்ணரை முறையாக அறிந்து, அவருக்கு பக்தி செய்பவர்கள், தங்களது வாழ்வின் இறுதியில் அவரிடமே செல்வர்.

## ஏழாம் அத்தியாயத்திற்கும் எட்டாம் அத்தியாயத்திற்கும் உள்ள தொடர்பு

ஏழாம் அத்தியாயத்தின் இறுதியில் கிருஷ்ணர் கூறிய சில சொற்களை முறையாகப் புரிந்துகொள்ளும் பொருட்டு அர்ஜுனன் கேள்விகளை எழுப்புகிறான்.

## அர்ஜுனனின் கேள்விகளும் கிருஷ்ணரின் பதில்களும்

"பிரம்மன், அத்யாத்மம், கர்ம, அதிபூதம், அதிதைவம், மற்றும் அதியக்ஞம் என்றால் என்ன? மரண நேரத்தில் உம்மை எவ்வாறு அறிய முடியும்?" என்ற அர்ஜுனனின் கேள்வியுடன் எட்டாம் அத்தியாயம் தொடங்குகிறது. மரண நேரம் குறித்த கேள்வியைத் தவிர இதர கேள்விகளுக்கு இரண்டு ஸ்லோகங்களில் பதிலளித்த பகவான், மரண நேரம் குறித்து விளக்கமாக அத்தியாயத்தின் இறுதி வரை விளக்குகிறார்.

அழிவற்ற உன்னதமான உயிர்வாழி பிரம்மன் என்றும், அதன் நித்தியமான

இயற்கை அத்யாத்ம என்றும், ஜீவனின் ஜடவுடலைச் சார்ந்த செயல்கள் கர்ம என்றும் அழைக்கப்படுகின்றது. என்றும் மாறக்கூடிய ஜட இயற்கை அதிபூத என்றும், அனைத்து தேவர்களும் அடங்கிய விஸ்வரூபம் அதிதைவ என்றும், எல்லோர் இதயத்திலும் இருக்கும் பரமாத்மாவான கிருஷ்ணர் அதியக்ஞ என்றும் கூறப்படுகிறது.

## மரண நேரத்தில் கிருஷ்ணரை நினைத்தல்

மரண நேரத்தில் கிருஷ்ணரை மட்டுமே நினைத்து உடலை விடுபவன், உடனடியாக அவரது ஆன்மீக உலகத்தை அடைகிறான், இதில் எந்த சந்தேகமும் இல்லை. வாழ்வின் இறுதியில் கிருஷ்ணரை நினைக்க விரும்புபவன், அதை தினசரி வாழ்வில் பயிற்சி செய்ய வேண்டும். எவ்வளவு தடைகள் இருந்தாலும், அவை எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு, ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே என்று தொடர்ந்து உச்சரிப்பவன், மரண நேரத்தில் அவரை எளிதில் நினைவு கொள்ள முடியும்.

மாறாக, அவன் வேறு எந்த நிலையை நினைத்தாலும், அந்த நிலையை அடைவான். தனது வாழ்நாளில் எத்தகு சிந்தனைகளுடன் விளங்குகின்றானோ, அச்சிந்தனைகள் அனைத்தும் ஒருங்கிணைந்து மரண நேரத்தில் அவனது சிந்தனையை வடிவமைக்கின்றன. உதாரணமாக, மரண நேரத்தில் ஒருவன் ஒரு மானை நினைத்தால், மறுபிறவியில் அவன் மானாகப் பிறக்க நேரிடும்.

மரணத்திற்குப் பின்பு கிருஷ்ணரை அடைதல் என்னும் உயர்நிலையை அடைய விரும்புவோர், தங்களது கடமைகளைச் செய்யும்போது, எப்போதும் கிருஷ்ணரை நினைத்துக் கொண்டு செய்ய வேண்டும். செயல்களை கிருஷ்ணருக்கு அர்ப்பணித்து, மனதையும் புத்தியையும் அவரில் நிறுத்துபவன், நிச்சயமாக அவரை அடைவான்—இதில் எந்த சந்தேகமும் இல்லை. கிருஷ்ணரை நினைத்தபடி கிருஷ்ணருக்காகப் போர்புரியும்படி அர்ஜுனன் இங்கு தூண்டப்படுகிறான்.

கிருஷ்ணரை பரம புருஷ பகவானாக எப்போதும் தியானித்து, மனதை அவரை நினைப்பதில் ஈடுபடுத்தி, அதிலிருந்து சற்றும் பிறழாதவன் நிச்சயமாக அவரை அடைகிறான். அவரது பக்தித் தொண்டில் நேரடியாக ஈடுபடாதவர்கள், அவரை எப்போதும் நினைத்தல் சாத்தியமல்ல என்பதால், யோகம் கலந்த பக்தியின் மூலமாக அவரை நினைக்கும்படி அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## யோகம் கலந்த பக்தி

யோகிகளின் இறைவனாக இருக்கும் கிருஷ்ணரை யோகிகள் பத்து வழிகளில் தியானிக்க முடியும். எல்லாமறிந்தவர் (*கவிம்*), மிகப் பழமையானவர் (*புராணம்*), எல்லாவற்றையும் கட்டுப்படுத்துபவர் (*அநுஷாஸிதாரம்*), அணுவைவிடச் சிறியவர் (*அணோர் அணியாம்ஸம்*), எல்லாவற்றையும் பராமரிப்பவர் (*ஸர்வஸ்ய தாதாரம்*), பௌதிக நிலைக்கு அப்பாற்பட்டவர், புரிந்துகொள்ள முடியாதவர் (*அசிந்திய*), உருவமுடையவர் (*ரூபம்*), சூரியனைப் போன்ற பிரகாசமுடையவர் (*ஆதித்ய வர்ணம்*), ஜட இயற்கையைக் கடந்த உன்னதமானவர் (*தம: பரஸ்தாத்*) என்று அவரை தியானிக்க முடியும்.

யோகம் கலந்த பக்தியைப் பயிற்சி செய்பவர்கள், இறக்கும் தருவாயில், உயிர் மூச்சை புருவங்களுக்கு மத்தியில் நிறுத்தி, யோக பலத்தினால், கிருஷ்ணரை நினைத்தால், அவரை நிச்சயமாக அடைய முடியும். முக்திக்காக முயற்சி செய்யும் இவர்கள், வேதங்களைக் கற்று, ஓம்காரத்தை ஓதி, பிரம்மசர்யத்தைப் பயிற்சி செய்ய வேண்டும். புலன்களின் எல்லா கதவுகளையும் மூடி, மனதை இதயத்திலும் உயிர் மூச்சை தலை உச்சியிலும் நிறுத்தி, ஓம் என்னும் பிரணவ மந்திரத்தை உச்சரித்து, கிருஷ்ணரை நினைத்தபடி உடலை விட்டு ஆன்மீக கிரகங்களை அடைய வேண்டும்.

## தூய பக்தி

யோகம் கலந்த பக்தியில் ஈடுபடு பவன் அத்தகைய கடினமான வழி முறைகளைப் பின்பற்ற வேண்டிய அதே சமயத்தில், பிறழாத மனதுடன் தூய்மையான பக்தியில் ஈடுபட்டு, எப்போதும் கிருஷ்ணரை நினைப்பவன், அவரை சுலபமாக அடைகிறான். தூய பக்தித் தொண்டில் ஈடுபடும் பக்தன் கிருஷ்ணரைத் தவிர வேறு எதையும் விரும்புவதில்லை. ஸ்வர்க லோகங்களுக்கு ஏற்றம் பெறவோ, பிரம்மஜோதியில் இரண்டறக் கலக்கவோ, மோக்ஷம் பெறவோ அவன் விரும்புவ



*ஒருவன் எத்தகு மனநிலையுடன் வாழ்கின்றானோ, அதற்கேற்ற உடலை மறுபிறவியில் அடைகிறான்.*

தில்லை. கர்ம யோகம், ஞான யோகம், அஷ்டாங்க யோகம் ஆகியவற்றைப் பின்பற்றுபவர்களைப் பாதிக்கும் எந்த வொரு பிரச்சனையாலும் தூய பக்தன் பாதிப்பதில்லை. தூய பக்தனால் கிருஷ்ண ரை ஒரு கணம்கூட மறக்க முடியாது; கிருஷ்ணராலும் அத்தகு பக்தனை ஒரு கணமும் மறக்க முடியாது.


பக்தி யோகத்தில் நிலைபெற்றிருக்கும் மகாத்மாக்கள், மரணத்திற்குப் பின்பு, துன்பம் நிறைந்த இந்த ஜடவுலகிற்குத் திரும்பி வருவதில்லை. அவர்கள் மிகவுயர்ந்த இருப்பிடமான வைகுண்டத்தை அடைகின்றனர். இந்த ஜடவுலகத்திலுள்ள எல்லா லோகங்களும் தற்காலிகமானவை; பிரம்ம லோகம் முதல் தாழ்ந்த லோகம் வரை எங்கு சென்றாலும், அங்கு நிலையாகத் தங்க முடியாது, மீண்டும் இந்த பூமிக்குத் திரும்பவேண்டும். ஆனால் கிருஷ்ணரின் இருப்பிடத்தை அடைந்தவன் என்றும் மறுபிறவி எடுப்பதில்லை.

## ஜடவுலகத்தையும் ஆன்மீக உலகத்தையும் ஒப்பிடுதல்

மனித கணக்கின்படி, பாவங்களற்ற ஸத்ய யுகம் 17,28,000 வருடங்களும், திரேதா யுகம் 12,96,000 வருடங்களும், துவாபர யுகம் 8,64,000 வருடங்களும், இறுதியில் வரும் கலி யுகம் 4,32,000 வருடங்களும் கொண்டதாகும். இந்த நான்கு யுகங்கள் ஆயிரம் முறை சுழலும்போது, அது பிரம்மாவின் ஒரு பகல், அவரது இரவும் அதுபோன்றதே. இவ்வாறு நூறு வருடங்கள் வாழும் பிரம்மா, அதன்பின் இறக்கின்றார். பிரம்மாவின் ஆயுள் மிகவும் நீண்டதாகத் தோன்றினாலும், பிரம்மா உட்பட ஜடவுலகத்தைச் சார்ந்த அனைவரும் பிறப்பு இறப்பிற்கு உட்பட்டவர்களே. பிரம்மாவின் பகல் பொழுதில் அனைத்து ஜீவன்களும் அவ்யக்த (வெளிப்படாத) நிலையிலிருந்து தோன்றுகின்றனர். இரவு வந்தவுடன், அவர்கள் மீண்டும் அவ்யக்தத்துடன் இணைந்துவிடுகின்றனர். மீண்டும் மீண்டும் பிரம்மாவின் பகலில் படைக்கப்பட்டு, இரவில் இவர்கள் அனாதரவாக அழிக்கப்படுகின்றனர். இதுவே ஜடவுலகம்.

தோன்றி மறையும் இந்த ஜட இயற்கைக்கு அப்பால், நித்தியமான தெய்வீக உலகம் உள்ளது. பரமான அந்த உலகம் என்றும் அழிவதில்லை. அவ்வுலகத்திற்குத் தோன்றிய காலம் என்று ஏதுமில்லை, அதற்கு அழிவும் இல்லை, அதுவே வேதாந்திகளின் பரமகதி, அங்கு சென்றவன் மீண்டும் திரும்புவதில்லை; அந்த உயர்ந்த இருப்பிடமே கிருஷ்ணரின் இருப்பிடம்.

கோலோக விருந்தாவனம் என்று அறியப்படும் ஸ்ரீ கிருஷ்ணரின் அந்த உன்னத இருப்பிடம், எல்லா விருப்பங் களையும் பூர்த்தி செய்யக்கூடிய இடமாக வர்ணிக்கப்படுகிறது. சிந்தாமணிக் கற்களால் கட்டப்பட்டு, கற்பக மரங்களும் சுரபிப் பசுக்களும் நிறைந்த அவ்விடத்தில், ஸ்ரீ கிருஷ்ணர் இலட்சக்கணக்கான லட்சுமிகளால் சேவை செய்யப்படுகிறார். புல்லாங்குழலை ஏந்தி, கோடானு கோடி மன்மதர்களையும் கவரும் மேக வர்ணம் கொண்ட அழகிய திருமேனியுடன், மஞ்சள் நிற உடையுடுத்தி, தலையில் மயில் தோகையை அணிந்தபடி அற்புதமான லீலைகளில் ஈடுபட்டுள்ளார். இவ்வாறான தெய்வீக இருப்பிடத்தில் வசிக்கும் அவர்,



பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனது கோலோக விருந்தாவனத்தில், புல்லாங்குழலை ஏந்தி, கோடானு கோடி மன்மதர்களையும் கவரும் மேக வர்ணம் கொண்ட அழகிய திருமேனியுடன், மஞ்சள் நிற உடையுடுத்தி, தலையில் மயில் தோகையை அணிந்தபடி அற்புதமான லீலைகளில் ஈடுபட்டுள்ளார்.

எங்கும் நிறைந்தவராகவும் இருப்பதால், களங்கமற்ற பக்தியினால் அவரை அடைய முடியும்.

## கிருஷ்ணரை அடைவதில் தூய பக்தியின் உயர்நிலை

தூய பக்தித் தொண்டில் ஈடுபடாமல், முக்தி பெறுவதற்கான முயற்சியில் ஈடுபடுவோரின் நிலையை மேலும் விளக்க விரும்பிய பகவான் ஸ்ரீ கிருஷ்ணர், யோகிகள் இவ்வுலகை விட்டுச் செல்வதற்கான உகந்த நேரத்தைப் பற்றி எடுத்துரைக்கத் தொடங்குகிறார். அக்னி தேவனின் ஆதிக்கத்தில், ஒளியில், பகலின் நல்ல நேரத்தில், வளர்பிறை உள்ள இரு வாரங்களில், சூரியன் வடக்கு நோக்கிச் செல்லும் ஆறு மாதங்களில், இவ்வுலகை விட்டுச் செல்லும் யோகி பரமனை அடைகிறான், மீண்டும் இவ்வுலகிற்கு வருவதில்லை.

ஆனால், புகையிலும், இரவிலும், தேய்பிறையிலும், சூரியன் தெற்கு நோக்கிச் செல்லும் ஆறு மாதங்களிலும், இவ்வுலகை விட்டுச் செல்லும் யோகிகள், சந்திர லோகத்தை அடைந்து, பின்னர் மீண்டும் இங்கு திரும்புகின்றனர். ஒளியில் செல்லும் பாதை, இருளில் செல்லும் பாதை ஆகிய இரண்டையும் அறிந்த பக்தர்கள் இவற்றால் ஒருபோதும் குழப்பமடைவதில்லை; ஏனெனில், இப்பாதைகளால் அவர்களுக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை.

தூய பக்தன், வேதங்களைப் படித்தல், யாகங்களைச் செய்தல், தவம் புரிதல், தானம் கொடுத்தல், கர்ம, ஞானப் பாதைகளை மேற்கொள்ளுதல் ஆகியவற்றால் அடையப்படும் எந்தவொரு பலனையும் இழப்பதில்லை. அவன் தூய பக்தியில் ஈடுபட்டு, அவையனைத்தையும் தானாகவே பெற்று, இறுதியில் கிருஷ்ணரின் உன்னதமான இருப்பிடத்தை அடைகிறான்.

*ஸ்ரீ கிரிதாரி தாஸ் அவர்கள், பகவத் தரிசனம் பத்திரிகை உட்பட பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் வெளியீடுகளுக்குத் தொகுப்பாசிரியராகத் தொண்டாற்றி வருகிறார்.*

## எட்டாம் அத்தியாயத்தின் ஆறு பகுதிகள்

ஏழாம் அத்தியாயத்துடனான தொடர்பு: 7.29-30, கிருஷ்ணர் உபயோகித்த வார்த்தைகள்: *பிரம்மன், அத்யாத்ம, கர்ம, அதிபூத, அதிதைவ, அதியக்ஞ, பிரயாண காலே.*

**(1) அர்ஜுனனின் கேள்விகளும் கிருஷ்ணரின் பதில்களும் (8.1-4)**

*பிரம்மன்*—உயிர்வாழி; *அத்யாத்ம*—ஆத்மாவின் நித்திய இயற்கை;
*கர்ம*—உடல் சார்ந்த செயல்கள்; *அதிபூத*—ஜட இயற்கை;
*அதிதைவ*—விஸ்வரூபம்; *அதியக்ஞ*—பரமாத்மா

**(2) மரண நேரத்தில் கிருஷ்ணரை நினைத்தல் (8.5-8)**

மரண நேரத்தில் கிருஷ்ணரை நினைப்பவன் கிருஷ்ணரை அடைகிறான்
வேறு எதை நினைத்தாலும் அந்த நிலையை அடைகிறான்
கிருஷ்ணரை அடைவதற்கு எப்போதும் அவரை நினைக்கப் பழக வேண்டும்

**(3) யோகம் கலந்த பக்தி (8.9-13)**

யோகம் கலந்த பக்தியில் ஈடுபடுவோர் பத்து விதங்களில் கிருஷ்ணரை தியானிக்க முடியும்

**(4) தூய பக்தி (8.14-16)**

தூய பக்தியில் ஈடுபடுவோர் கிருஷ்ணரை சுலபமாக அடையலாம்
அவர்கள் துன்பம் நிறைந்த இவ்வுலகத்திற்குத் திரும்பி வருவதில்லை

**(5) ஜடவுலகத்தையும் ஆன்மீக உலகத்தையும் ஒப்பிடுதல் (8.17-22)**

பிரம்மாவின் ஒருநாள், மனிதக் கணக்கில் 1000 யுகச் சுழற்சிகள்
ஜடவுலகம் மீண்டும் மீண்டும் படைத்து அழிக்கப்படுகிறது
இதற்கு அப்பாற்பட்ட ஆன்மீக உலகம் நித்தியமானது, தெய்வீகமானது
களங்கமற்ற பக்தியினால் அதனை அடையலாம்

**(6) கிருஷ்ணரை அடைவதில் தூய பக்தியின் உயர்நிலை (8.23-28)**

யோகிகள் உலகைவிட்டுச் செல்வதற்கென்று குறிப்பிட்ட காலம் உண்டு
பக்தர்கள் இதனால் குழம்பத் தேவையில்லை

**பகவத் கீதையின் இந்த [எட்டாம்] அத்தியாயத்திலும் ஏழாம் அத்தியாயத்திலும் கிருஷ்ணர் கொடுத்துள்ள உபதேசங்களை அவசியம் புரிந்துகொள்ள வேண்டும். இந்த அத்தியாயங்களை ஏட்டுக் கல்வியின் மூலமோ, மனக் கற்பனையின் மூலமோ அறிந்துகொள்ள முயலாமல், தூய பக்தர்களின் சங்கத்தில் கேட்டறிய வேண்டும்... பக்தர்களின் உறவால் பகவத் கீதையைப் புரிந்துகொள்ளும் நல்லதிர்ஷ்டத்தை ஒருவன் பெற்றால், உடனடியாக அவரது வாழ்வு, தவங்கள், யாகங்கள், தானங்கள், தத்துவங்கள் என எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டு புகழத்தக்கதாக மாறிவிடும்.**

**—தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்**
**[பகவத் கீதை 8.28, பொருளுரை]**

# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## தெய்வீகமும் தெய்வீகத் தொண்டும்

### அத்தியாயம் இரண்டு, ஸ்லோகம் 12

(தொடர்ச்சி) அதிகாரிகளிடமிருந்து கேட்பதற்கான சுவை ஆரம்பநிலை பக்தர்களிடம் மிகக் குறைவாகவே உள்ளது. பாகவதம் பேசுவதை தொழிலாகச் செய்யும் நபர்களிடமிருந்து கேட்கும் அத்தகு ஆரம்ப நிலை பக்தனின் அத்தகு பாவனைகள் உண்மையில் அவனது புலன்களைத் திருப்திப்படுத்துவதற்காகவே. இவ்வாறு கேட்பதும் கூறுவதும் அனைத்தையும் பாழாக்கி விடுகிறது என்பதால், இந்த தவறான வழிமுறை குறித்து மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். பகவத் கீதையிலும் ஸ்ரீமத் பாகவதத்திலும் பரம புருஷரைப் பற்றிக் கூறப்பட்டுள்ள புனிதமான செய்திகள் சந்தேகமின்றி தெய்வீகமானவைதான்; எனினும், விஷமுள்ள பாம்பின் நாக்கினால் தீண்டப்படும் பால் கெட்டுவிடுவதைப் போல், பாகவதம் பேசுவதைத் தொழிலாகக் கொண்டுள்ள நபர்கள் அதன் தெய்வீகச் செய்திகளைக் கெடுத்துவிடுவதால், அவர்களிடமிருந்து அவற்றைக் கேட்கக் கூடாது.

ஆகவே, உண்மையான பக்தரொருவர் தனது முன்னேற்றத்தின் நன்மைக்காக உபநிஷதங்கள், வேதாந்தம், ஆச்சாரியர்கள் அல்லது கோஸ்வாமிகளால் வழங்கப்பட்ட பிற இலக்கியங்கள் ஆகியவற்றைக் கேட்கத் தயாராக இருக்க வேண்டும். அத்தகைய இலக்கியங்களைக் கேட்காமல் ஒருவரால் உண்மையான முன்னேற்றத்தைப் பெற முடியாது. மேலும், உபதேசங்களைக் கேட்காமலும் பின்பற்றாமலும் பக்தித் தொண்டில் இருப்பதுபோன்று பாவனை செய்தல் பயனற்றதாகும்; எனவே, அவை பக்தித் தொண்டின் வழியில் ஒருவகையான தொந்தரவாக அமைகின்றன. ஆதலால், ஸ்ருதி, ஸ்மிருதி, புராணம் அல்லது பஞ்சராத்திரத்தின் கொள்கைகளுக்கு ஏற்றபடி பக்தித் தொண்டு ஸ்தாபிக்கப்படாவிடில், வெறும் காட்சிக்காக மட்டுமே செய்யப்படும் பக்தித் தொண்டை உடனடியாக விலக்கிவிட வேண்டும். அங்கீகரிக்கப்படாத பக்தனை தூய பக்தனாக ஒருபோதும் ஏற்கக் கூடாது. வேத இலக்கியங்களிலுள்ள இச்செய்திகளை கிரகித்துக் கொள்வதால், பரம புருஷரின் எங்கும் வியாபித்துள்ள பரமாத்மா தோற்றத்தை ஒருவரால் தனது இதயத்திற்குள் இடையறாது காண முடியும். இதுவே ஸமாதி எனப்படுகிறது.

### பதம் 13

*அத: பும்பிர் த்விஜ-ஷ்ரேஷ்டா வர்ணாஷ்ரம-விபாகஷ:*
*ஸ்வனுஷ்டிதஸ்ய தர்மஸ்ய ஸம்ஸித்திர் ஹரி-தோஷணம்*

### மொழிபெயர்ப்பு

இரு பிறப்பு எய்தியவர்களில் சிறந்தவரே, வர்ணத்திற்கும் ஆஷ்ரமத்திற்கும் ஏற்றவாறு ஒவ்வொருவரும் தங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள கடமைகளை நிறைவேற்றுவதன் மிகவுயர்ந்த பக்குவநிலை, முழுமுதற் கடவுளைத் திருப்தி செய்வதே என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

### பொருளுரை

உலகெங்கிலும் உள்ள மனித சமுதாயம், நான்கு வர்ணங்களாகவும் (ஜாதிகளாகவும்), நான்கு ஆஷ்ரமங்களாகவும் (வாழ்வின் பருவங்களாகவும்) பிரிக்கப்பட்டுள்ளன. புத்திசாலிகளின் பிரிவு, போர் புரிவோரின் பிரிவு, விவசாயம் செய்வோரின் பிரிவு, தொழிலாளர்களின் பிரிவு ஆகிய நான்கு பிரிவுகளும் ஜாதிப் பிரிவுகளாகும். இவை ஒருவரின் தொழிலுக்கும் தகுதிக்கும் ஏற்றவாறு பிரிக்கப்பட்டுள்ளன, பிறப்பினால் அல்ல. மாணவப் பருவம், இல்லற பருவம், ஓய்வு பெற்ற பருவம், பக்திப் பருவம் ஆகிய நான்கும் வாழ்வின் பருவங்களாகும். மனித சமூகத்தின் மிகச்சிறந்த நன்மைக்கு இத்தகைய பிரிவுகள் அவசியமாகும்; இல்லையெனில் எந்த சமூக அமைப்பும் ஆரோக்கியமான முறையில் வளர்ச்சியடைய முடியாது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு பிரிவிலும், பரம அதிகாரியான முழுமுதற் கடவுளைத் திருப்திப்படுத்துவதே நோக்கமாக இருக்க வேண்டும். மனித சமுதாயத்தின் இந்த நிர்வாக அமைப்பு, *வர்ணாஷ்ரம-தர்மம்* என்று அழைக்கப்படுகிறது. பண்பாடுடைய வாழ்விற்கு இது மிகவும் பொருத்தமானதாகும். வர்ணாஷ்ரம அமைப்பு, பரம்பொருளை அறிவதில் உதவி செய்வதற்காகவே ஏற்படுத்தப்பட்டுள்ளது; ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை செயற்கையான முறையில் அடக்கி ஆள்வதற்காக அல்ல. இங்கு முன்பே விளக்கப்பட்டதுபோல, *இந்திரிய-ப்ரீதி* எனப்படும் புலனுகர்ச்சியின் மீதான அளவுக்கதிகமான பற்றுதலால், பரம்பொருளை உணர்தல் என்னும் வாழ்வின் நோக்கம் இழக்கப்படும்போது, பலவீனமான பிரிவுகளை செயற்கையாக அடக்கி ஆள்வதற்காக, இந்த வர்ணாஷ்ரம அமைப்பை சுயநலவாதிகள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

சண்டை சச்சரவுகள் நிறைந்த இக்கலி யுகத்தில், இத்தகைய செயற்கையான ஆதிக்கம் ஏற்கனவே உள்ளது. ஆனால் இந்த ஜாதி மற்றும் ஆஷ்ரமப் பிரிவுகள், சமூக ஒற்றுமையையும் தன்னுணர்வையும் பெறுவதற்காகவே உள்ளன, வேறெந்த நோக்கத்திற்காகவும் அல்ல என்பதை பகுத்தறிவுடைய மக்கள் நன்கறிவர்.

வாழ்வின் மிகவுயர்ந்த நோக்கம் அல்லது வர்ணாஷ்ரம தர்மத்தின் மிகவுயர்ந்த பக்குவநிலை என்பது, முழுமுதற் கடவுளின் திருப்திக்காக ஒன்றிணைந்து செயல்படுவதே என்று இங்கே பாகவதத்தில் கூறப்படுகிறது. இக்கருத்து பகவத் கீதையிலும் (4.13) உறுதி செய்யப்பட்டுள்ளது.

### பதம் 14

*தஸ்மாத் ஏகேன மனஸா பகவான் ஸாத்வதாம் பதி:*
*ஷ்ரோதவ்ய: கீர்திதவ்யஸ் ச த்யேய: பூஜ்யஷ் ச நித்யதா*

### மொழிபெயர்ப்பு

எனவே, பக்தர்களைக் காப்பவரான பரம புருஷ பகவான், ஒருமுகப்படுத்தப்பட்ட மனதுடன், என்றென்றும் கேட்கப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும், நினைக்கப்பட வேண்டும், பூஜிக்கப்பட வேண்டும்.

### பொருளுரை

பரம்பொருளை உணர்வதே வாழ்வின் இறுதியான குறிக்கோள் என்பதால், அதை நிறைவேற்ற ஒருவன் எல்லா வழிகளிலும் முயற்சி செய்ய வேண்டும். போற்றுதல், கேட்டல், நினைவிற் கொள்ளுதல், வழிபடுதல் ஆகிய இந்த நான்கு வழிமுறைகள், முன்னர் குறிப்பிடப்பட்ட அனைத்து ஜாதி மற்றும் ஆஷ்ரமப் பிரிவுகளுக்கும் பொதுவான தொழிலாகும். வாழ்வின் இந்த அடிப்படைக் கொள்கைகளின்றி யாரும் உயிர்வாழ முடியாது. உயிர்வாழியின் அன்றாடச் செயல்களில் இந்த நான்கு கொள்கைகள் அடங்கியுள்ளன. குறிப்பாக, நவீன சமுதாயத்திலுள்ள எல்லாச் செயல்களுமே ஏறக்குறைய கேட்பதையும் புகழ்வதையும் சார்ந்துள்ளன. ஒருவன் சமுதாயத்தில் எந்தவொரு நிலையில் இருந்தாலும், தினசரி செய்தித்தாள்களில் அவன் போற்றிப் புகழப்பட்டால், அஃது உண்மையாக இருந்தாலும் போலியாக இருந்தாலும், அவன் குறுகிய காலத்திலேயே மிகவும் பிரபலமானவனாக மாறிவிடுகிறான். சிலநேரங்களில், அரசியல் கட்சித் தலைவர்கள்கூட செய்தித்தாளின் மூலமாக விளம்பரப்படுத்தப்படுகின்றனர். இத்தகு புகழ்ச்சியினால், மிகக் குறுகிய காலத்தில் அற்பனும் முக்கியமானவனாக மாறிவிடுகிறான். ஆனால் தகுதியற்ற மனிதனை போலியாகப் புகழும் இத்தகைய விளம்பரத்தினால் அந்த மனிதனுக்கோ சமுதாயத்திற்கோ எவ்வித நன்மையும் இல்லை. அத்தகைய பிரசாரத்தினால் சில தற்காலிகமான பலன்கள் கிடைக்கலாம், ஆனால் நிரந்தர நன்மைகள் ஏதுமில்லை. ஆகவே, அச்செயல்கள் நேரத்தை விரயமாக்குபவை. நம்முன் காட்சியளிக்கும் அனைத்தையும் படைத்தவரான பரம புருஷ பகவானே உண்மையான புகழுக்குரியவர். இவ்வுண்மையை பாகவதத்தின் தொடக்கத்திலுள்ள *ஜன்மாத்யஸ்ய* ஸ்லோகத்தில் தெளிவாக விளக்கி உள்ளோம். மற்றவர்களைப் புகழ்வதற்கும் அவர்களைப் பற்றிக் கேட்பதற்கும் இருக்கும் சுபாவத்தை, உண்மையான புகழுக்குரிய பரம புருஷ பகவானை நோக்கித் திருப்ப வேண்டும். அது மகிழ்ச்சியைப் பெற்றுத் தரும். (தொடரும்)




# பகவத் தரிசனம்

67 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ்ப் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**



**நீங்களும் சந்தாதாரராக மாற...**

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: பகவத் தரிசனம், ISKCON, 7c, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

பகவத் தரிசனம் படியுங்கள்! பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!

# மாஸ்கோவில் புதியதோர் கிருஷ்ண ஆலயம்

இஸ்கான் ரஷ்யாவின் மிகப்பெரிய திட்டமான ஸ்ரீ ஸ்ரீ ராதா மாதவர் கோவில் திருப்பணிகளுக்கு ரஷ்ய அரசின் அனுமதி கிடைத்துவிட்டது. மாஸ்கோவின் வடக்கிலுள்ள மோல்ஜனிநோவ்ஸ்கி என்னும் இடத்தில் இரண்டு ஹெக்டேர் நிலப்பரப்பில் விரைவில் பிரம்மாண்டமான கோவில் கட்டப்பட உள்ளது. அதிநவீன தொழில்நுட்பத்துடன் கட்டப்படும் இக்கோவிலில், இந்திய பாரம்பரியத்தை எடுத்துரைக்கும் வளைவுகளும் கோபுரங்களும் ''நாகரா'' முறையில் அமையவுள்ளன; மிகப்பெரிய பிரார்த்தனை கூடம், பக்தர்களும் விருந்தினர்களும் தங்குவதற்கான வசதிகள், வேத இலக்கியங்களின் நூலகம், பொருட்காட்சி நிலையம் போன்ற வசதிகளுடன், இக்கோவில் ரஷ்ய மக்களுக்கு பெரும் பொக்கிஷமாக விளங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.



இக்கோவிலின் வடிவமைப்பு சுமார் நான்கு வருடங்களுக்கு முன்பே தயாராகிவிட்டது என்பதும், ரஷ்ய அரசாங்கத்தின் கெடுபிடியினாலும், கிருஸ்துவ குழுக்களின் எதிர்ப்பினாலும், இக்கோவிலின் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படாமல் இருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

### (ஆகஸ்ட் 1, 2011 முதல் செப்டம்பர் 15, 2011 வரை)

### ஆகஸ்ட்

3, புதன், ஸ்ரீ ரகுநந்தன தாகூர் மறைவு நாள்,
ஸ்ரீ வம்சிதாஸ பாபாஜி மறைவு நாள்

9, செவ்வாய், ராதா கோவிந்த ஊஞ்சல் உற்சவம்,
பவித்ரோபன ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:04–10:15
ஸ்ரீல ரூப கோஸ்வாமி மறைவு நாள்
ஸ்ரீல கௌரிதாஸ பண்டிதர் மறைவு நாள்

12, வெள்ளி, முதல் சாதுர்மாதத்தின் இறுதி நாள்

13, சனி, ஊஞ்சல் உற்சவத்தின் நிறைவு நாள்,
பலராமரின் அவதாரத் திருநாள் (மதியம் வரை விரதம்)
சாதுர்மாதத்தின் இரண்டாம் மாதம் ஆரம்பம்
(தயிர் வகைகளிலிருந்து ஒரு மாதம் விரதம்)

22, திங்கள், ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி
(நள்ளிரவு வரை விரதம்)

23, செவ்வாய், நந்தோத்ஸவம்
ஸ்ரீல பிரபுபாதர் தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

25, வியாழன், அன்னத ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:05–10:13

### செப்டம்பர்

2, வெள்ளி , ஸ்ரீமதி சீதா தாகூராணி (அத்வைத ஆச்சாரியரின் துணைவியார்) தோன்றிய நாள்

5, திங்கள், ராதாஷ்டமி, ஸ்ரீமதி ராதாராணி தோன்றிய நாள் (மதியம் வரை விரதம்)

8, வியாழன், பார்ஸ்வ ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிக்கும் நேரம் 06:05–10:10

9, வெள்ளி, வாமன துவாதசி, வாமனர் தோன்றிய நாள்
(விரதம் முந்தைய நாளே அனுசரிக்கப்படுகிறது)
ஸ்ரீல ஜீவ கோஸ்வாமி தோன்றிய நாள்

10, சனி, ஸ்ரீல பக்திவினோத தாகூர் தோன்றிய நாள்
(மதியம் வரை விரதம்)
இரண்டாவது சாதுர்மாதத்தின் கடைசி நாள்

12, திங்கள், ஸ்ரீல பிரபுபாதர் சந்நியாசம் ஏற்ற நாள்
மூன்றாவது சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு பால் சாப்பிடக் கூடாது)

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்துக் கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற் கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஓசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஓசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 119. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@gmail.com www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் சாலை, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: (0431) 2433945.

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jgd@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.

# ஸ்ரீ கிருஷ்ண ஜன்மாஷ்டமி

ஆகஸ்ட் 21 & 22, ஞாயிறு, திங்கள்

பஜனை • கீர்த்தனம் • அபிஷேகம் • சொற்பொழிவு • கலை நிகழ்ச்சிகள் • பிரசாதம்



மேலும் விபரங்களுக்கு, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் கோவிலைத் தொடர்பு கொள்ளவும்.

அனைவரும் வருக. ஸ்ரீ கிருஷ்ணரின் அருளைப் பெறுக.




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

330, 80 அடி ரோடு, அம்பிகா தியேட்டர் எதிரில்
அண்ணாநகர், மதுரை. போன்: 0452 2524553

**இராஜபாளையம்**
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

**காரைக்குடி**
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

**இராமநாதபுரம்**
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

**தூத்துக்குடி**
351, WGC. ரோடு, தூத்துக்குடி.
போன்: 0461 2337553

**திண்டுக்கல்**
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

**தேனி**
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 251553

**சிவகாசி**
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

**கம்பம்**
53, குமுளி ரோடு, காந்தி சிலை அருகில்.
போன்: 04554 274553